69

Registered No. M. 2330.

"SIDDHAN... M"
Vol. 4—No. 6.

4 - JUL 1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் ச | பிரசோற்பத்தி ஆண்டு ஆனித் திங்கள்<br>1931 ஞு ஜூன்மீ | இதழ் சு |

உள்ளுறை — பக்கம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ... கசுஙி
சம்பந்தரின் வானநூற் கல்வி ... ... அஙி
திருஞானசம்பந்தரும், அலைறத்தீர் தமிழும் ... கடுஎ
சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கையர் ... ... கசுக
திருஞானசம்பந்தர் திருமண நட்பம் ... ... கசுச

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# சமாஜ அறிக்கைகள்

1. சம்பந்தர் தேவார வெளியீட்டின் ஞாபகக் குறியாக இவ்விதழில் சம்பந்தரைப் பற்றிய கட்டுரைகளையே வெளியிடுகிறோம்.

2. நிகழும் பிரஜோற்பத்தி௵ வைகாசி௴ ௨௰௳ (2-6-1931) செவ்வாய்க் கிழமை வைகாசி மூலத்திருநாளன்று சமாஜத்தொண்டர்கள் காலையில் ஸ்ரீகாழிப் பதிக்கும் மாலையில் திருநல்லூர்ப் பெருமணத்துக்கும் யாத்திரையாகச் சென்றனர். காலையில் ஸ்ரீகாழியில் திருக்கோயில் வழி பாடு செய்து திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருவடிகளில் சமாஜத்தின் சம்பந்தர் தேவாரம் சுத்தப் பதிப்பை வைத்து, சமாஜத் தொண்டுகள் மேன்மேலும் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்தனர். ஸ்ரீ காழியில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துதவிய திரு. S. பாலவேலாயுதம் பிள்ளையவர்கட்குச் சமாஜத்தினர் நன்றி பெரிதும் உரித்து. மாலையில் திருநல்லூர்ப் பெருமணத்தில் இறை வழிபாடாற்றி ஒரு பொதுக்கூட்டம் நடத்தி, சம்பந்தர் தேவாரத்தின் சமாஜ சுத்தப்பதிப்பை வெளியிட்டனர். அக்கூட்டத்துக்கு திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் திரு. வி. உலகநாத முதலியார், சிவ. சிதம்பரம் செட்டியார், தி. கு. கி. நாராயணசாமி நாயடு, சாமி வேலாயுதம் பிள்ளை ஆகிய பெரியார்கள் சம்பந்தர் சரித்திரம், தேவாரச் சிறப்பு முதலியன பற்றி அரிய செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். காரியதரிசி அனைவர்க்கும் நன்றி கூறிய பின்னர் கடவுள் வாழ்த்தொலி முழங்கக் கூட்டம் இனிது நிறைவேறியது.

3. ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டம், அவளூர்ப் பேட்டை தேவார சபை, சேலம் செவ்வாய்ப்பேட்டை திருஞானசம்பந்த சுவாமிகள் திருச்சபை, மருதவரை நீழல் பிள்ளையார் நன்னெறிக்கழகம் என்ற சபைகள் ஆண்டு விழாக்களைச் செவ்வனே நடத்திய செய்தியை மிக மகிழ்ச்சியோடு வெளியிடுகிறோம். இவற்றுள் முதல் இரண்டும் சமாஜத்தோடு இணைக்கப் பெற்றுள்ளன. நீடாமங்கலத்தை யடுத்த ஆலங்குடியில் ஸ்ரீ சுந்தரானந்த நிலையத்தில் திரு. த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் தினந்தோறும் திருத்தொண்டர் புராணத்தை நடத்தி வருகிறார்கள்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,<br>ஜி. டி. சென்னை, 10-6-1931.

இங்ஙனம் :<br>ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

## மதிப்புரை

**பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்:**—ஆசிரியர்: கா. சுப்பிரமண்யம் பிள்ளை, எம். ஏ., எம். எல். ; விலை அணு 12. சாது அச்சுக்கூடம், சென்னை. இந்நூல், பிள்ளையவர்கள் எழுதியுள்ள ஏனைய ஆராய்ச்சி நூல்களைப் போலவே உயரிய முறையில் எழுதப்பட்டுள்ளது. பட்டினத்தடிகள் இருவர் இருந்திருக்க வேண்டுமென்றும், பதினோராந் திருமுறையில் சேர்க்கப்படாது பட்டினத்தார் பாடல் என வழங்கும் பாடல் முழுமையும் பிற்காலத்தில் பட்டினத்தார் என்று பெயர் கொண்ட வேறு ஒருவரால் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், இப்பாடலுக்கும் பதினோராந் திருமுறைக்கண் உள்ள பாடலுக்கும் பொருள், நடை முதலிய பலவகையிலும் பெரிய வேறுபாடு காணப்படுகிறதென்றும் ஆசிரியர் ஆராய்ந்து முடிபு கூறுதல் அறிவுக்குப் பொருத்தமாகவுள்ளது. பதினோராந் திருமுறையிலுள்ள பட்டினத்தார் பாடல் முழுமையும் அநுபந்தமாக அச்சிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சைவரும் இந்நூலை வாங்கி வாசிப்பது கடமையாகும்.

4- JUL 1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உன்னாடு "

| | | |
|---|---|---|
| மலர் ச | பிரசோற்பத்தி ஆண்டு ஆனித் திங்கள்<br>1931 ஞு ஜூன்மீ | இதழ் சு |

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்

[பத்திராசிரியர்]



திருச்சிற்றம்பலம்

" வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம் "

அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் முதலிய தலங்களையும், பொன்னம் பாலிக்கும் பொன்னியாகிய காவிரி முதலிய தீர்த்தங்களையும், முன்னங் காலனைக் காய்ந்து அடைக்கலம் புகுந்த அந்தணனுற்கருளிய அண்ணலாதிய மூர்த்திகளையும் உடையது சோழவளநாடு. இந்நாட்டிற்கொரு திலகமாய் விளங்குவது பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய சீகாழிப் பதியாகும். இவ்வூரிலே கவுணிய கோத்திரத்திலே (இந்தக் கோத்திரம் இப்போது கௌண்டிந்ய கோத்திரம் என்று வழங்கப்படுகிறது) அவதரித்த சிவபாத இருதயர் என்ற அந்தணசீலர் பகவதி என்ற பெண்மணியை மணந்து, வேத நெறியிலும் மிகு சைவத் துறையிலும் வகுத்துள்ள ஒழுக்கத்தில் ஒரு சிறிதும் பிறழாது நின்று, இல்லறத்தைச் செவ்வையாய் நடத்தி வந்தனர். புத்திரப் பேறில்லாமையால், இருவரும் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து "இப்போது தமிழ்நாட்டில் வேரூன்றி யிருக்கும் பௌத்தம், சமணம் என்ற புறப்புறச் சமயங்களை யொழித்து சைவத்தை நிலை நாட்ட வல்ல சமயாசாரியார் தோன்ற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். அவர்கள் தவத்துக்கு உவந்து இறைவன் அருள்சுரக்கவும், பகவதியார் கருப்பவதியாகி ஒவ்வொரு மதியிலும் நடைபெற வேண்டிய வேதவிதிச் சடங்குகள் நிறைவெய்திய பின்னர், பத்தாம் மாதத்திலே திருவாதிரை நன்னாளிலே நற்கோள்கள் உச்சத்திலிருக்கும் வேளையிலே

ஒளி பொருந்திய அழகுமிக்க ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இவ்வாண் குழந்தையே தேவாரத் திருமுறைகள் முதல் மூன்றையும் திருவாய் மலர்ந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் ஆவார்.

சிவபாதவிருதயரும் பகவதியாரும் குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். குழந்தைக்குரிய வைதிகச் சடங்குகளை யெல்லாம் முறைப்படி செய்து வைத்தார்கள். குழந்தைக்கு மூன்றாவது வயது நடந்து வரும்போது ஒரு நாள் தனது தகப்பனாரோடு திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்று குழந்தை பிடிவாதமாய் அழுதது. தந்தையார் குழந்தையை அழைத்துச் சென்று குளக்கரையில் உட்கார வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கி அகமர்ஷண மந்திரத்தை ஓதிக்கொண்டே தண்ணீருள் மூழ்கி ஸ்நானம் செய்வாராயினார். தமது தந்தையாரைக்காணாத குழந்தையார் பலதிசைகளிலும் நோக்கியழுது கடைசியாக "தம் மேலைச்சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமை தானோ" திருத்தோணியப்பர் கோயில் சிகரத்தைப்பார்த்து "அம்மே அப்பா" என்று அழத்தொடங்கினர். உடனே தோணியப்பர் தேவியாரோடு இடபவாகனத்தின் மேலேறி அழுகின்ற பிள்ளையின் முன் தோன்றி, பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக்கறந்து சிவஞானத்தைக் கலந்து ஊட்டும்படி பார்வதி தேவியாருக்குக் கட்டளையிட்டார். தேவியாரும் அவ்வாறே செய்தனர். ஞானப்பாலையுண்டவுடனே "சிவனடியேசிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்" எனப்பட்ட ஞானம் முழுமையும் கைவரப் பெற்ற குழந்தைக்குத் திருஞானசம்பந்தர் என்றகாரணப்பெயர் உண்டாயிற்று. ஞானப்பாலை யூட்டிவிட்டு இறைவனும் இறைவியும் மறைந்து போயினர். குழந்தையும் அப்போதுண்ட பால்வடிந்த உதடுகளோடு குளக்கரையில் உட்கார்ந்திருந்தது. தந்தையார் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கரையின்மேல் வந்து குழந்தையைக்கண்டு "உனக்குப்பால் கொடுத்தது யார்? வழிப்போக்கர் யாரோ கொடுத்த பாலை நீ ஏன் உண்டாய்?" என்று கோபத்தோடு ஒரு குச்சியை ஓங்கி அடிப்பவர்போல் கேட்டார். உடனே சிவஞானம் கைவரப் பெற்ற குழந்தை பால் கொடுத்தவர் இறைவனும் இறைவியுமே என்பதை யுணர்த்தித் தாம் நேரேகண்ட இடபவாகனரூட திவ்விய கோலத்தை அறிவுறுத்தி "தோடுடைய செவியன்" (பக்கம் - க) என்ற திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளினார். உடனே சிவபாத விருதயர் தமது குழந்தை, சிவஞானம் பெற்ற தெய்வக்குழந்தை என்பதை யுணர்ந்தார். இருவரும் திருக்கோயிலில் சிவபெருமான் சந்நிதிக்குச்சென்று வணங்கினர். கோயிலிலும் ஊரிலும் உள்ளார் அனைவரும் குழந்தை ஞானப்பாலுண்ட செய்தியை யறிந்து ஆநந்தத்தோடு திருஞானசம்பந்தரை ஊர்வலமாக இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். தாம் ஞானப்பாலுண்ட செய்தியைத் திருஞானசம்பந்தர் சில ஆண்டுகள் கழித்துத் தாம் பாடிய "போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத், தாதையார் முனிவுறத் தானெனையாண்டவன்" (பக்கம் - சகூ) என்ற தேவாரப் பாடலிலும் கூறியுள்ள அகச்சான்று நமக்குக் கிடைத்திருக்கிறது.

சிலநாட்கழித்து, சீகாழிக் கண்மையிலுள்ள திருக்கோலக்காவைத் தரிசிப்பதற்கு விரும்பிய தம்மைத் தந்தையார் தோளின்மேல் ஏற்றிச் செல்லத் திருஞானசம்பந்தர் திருக்கோயிலை யடைந்து கைகளால் தாளம்போட்டு "மடையில் வாளை" (பக்கம் - ருஎ) என்ற பதிகத்தை ஓதியருளினார். உடனே கண்ணுதல் வள்ளல் சுவாமிகட்குப் பஞ்சாக்கரம் வரையப்பெற்ற பொற்றாளங்க ளிரண்டை அசரீரியாகவிருந்து உதவினார். சுவாமிகள் அவைகளைப்பெற்றுத் தமது தேவாரத்திருத்தொண்டுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு பொற்றாளம் பெற்ற செய்தியைக்கேட்ட சோழநாட்டு மக்கள் ஊர் ஊராகத் திரள் திரளாகவந்து சுவாமிகளைத் தரிசித்து மகிழ்ந்து தங்கள் தங்கள் ஊர்கட்கெல்லாம் வந்தருளும்படி வேண்டினார்கள். சுவாமிகளும் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கித் தலயாத்திரை

187155



செய்து தேவாரங்களை ஓதி யருளினார். அவ்வாறு முதன்முதலாகச் சென்றவிடம் தமது தாயார் பிறந்த ஊராகிய திருநனிபள்ளி என்பதாகும்.

சிதம்பரத்துக்கருகேயுள்ள திருஎருக்கத்தம் புலியூரில் வசித்த திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியும் திருஞானசம்பந்தரைத் தரிசிக்கச் சீகாழி போந்தனர். சுவாமிகளைக்கண்டு மகிழ்வெய்தி, சுவாமிகள் தேவாரப் பதிகங்களைத் தங்கள் யாழில் அமைத்துவாசித்தனர். சுவாமிகளோடு எல்லாவிடங்கட்கும் உடன்சென்று சுவாமிகள் பாடும் தேவாரப்பதிகங்களை யெல்லாம் அவ்வப்போது யாழிலமைத்துப் பாடும் வரத்தையும் பெற்றனர்.

திருஞானசம்பந்தர் சிதம்பரம் முதலிய பல தலங்களைத் தரிசித்துத் திருநெல்வாயிலரத்துறையைக்காண விரும்பித் தந்தையார் தோளினின்றும் இழிந்து நடந்து சென்றார். சற்று நேரங்கழித்துக் களைப்புற்று வழியிலுள்ள மாறன்பாடி என்றவூரில் ஐந்தெழுத்தோதி அயர்ந்தனர். அவ்விரவு இறைவன் திருநெல்வாயிலரத்துறை வாசிகளின் கனவில் தோன்றி, திருக்கோயிலில் முத்துச்சிவிகை, குடை, சின்னங்கள் வைத்திருப்பதாகவும் அவற்றைச் சுவாமிகட்குச் சேர்ப்பிக்கும்படியாகவும் கட்டளையிட்டருளினார். சுவாமிகளுக்குக் கனவில் தோன்றி அவைகளை யேற்றுக் கொள்ளும்படி கட்டளையிட்டனர். விடியற்காலத்திலே திருநெல்வாயிலரத்துறைவாசிகள் கோயிலிற் சென்று முத்துச்சிவிகை குடை சின்னங்கள் மிளிர்வதைக் கண்டு வியந்து அவற்றைச் சுவாமிகளிடம் சமர்ப்பித்தார்கள். சுவாமிகளும் "எந்தை யீசனெம்பெருமான்" (பக்கம்-ஙஎ௦) என்ற பதிகம்பாடி ஐந்தெழுத்தோதி, சிவிகையில் ஆரோகணித்தார். பரிவாரங்கள் குடை, சின்னங்களைத் தாங்கி நின்றனர். பிறகு பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு சீகாழி யடைந்தனர்.

பிறகு உபநயனப் பருவத்தில் திருஞானசம்பந்தருக்கு வேத விதிப்படி உபநயனச் சடங்கு நடந்தது. வேதங்களின் முடிந்த பொருள்களை ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தர் உபநயனச் சடங்குக்கு வந்திருந்த மறையோருக்குள்ள ஐயந்திரிபுகளையெல்லாம் நீக்கி ஐந்தெழுத்தின் பெருமையை விளக்கித் "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்" (பக்கம் - சகூஉ) என்ற பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதியருளினார்.

திருஞானசம்பந்தர் வரலாற்றைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் அவரைக் காண்பதற்கென்றே சீகாழிக்கு வந்தனர். சுவாமி களும் அவரை எதிர்கொண்டழைத்து உபசரித்து இருவருமாகக் கோயிலை வணங்கிச் சிலநாள் இன்புற்றிருந்தனர். பிறகு திருநாவுக்கரசு சுவாமிகள் பல தலங்களைத் தரிசிக்கச் சென்றார். திருஞானசம்பந்தரும் சிவனடியார் புடைசூழப் பல பதிகளைத் தரிசித்துத் திருப்பாச் சிலாச் சிராமத்தை யடைந்தனர். ஆங்குள்ள கொல்லி மழவன் என்ற அரசன் சுவாமிகளை எதிர்கொண்டழைத்துக் கோயிலுக்குள் சிவ சந்நிதானத்துக்குச் சென்றான். ஆங்கு முயலகன் என்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு அறிவற்று நிலத்தில் வீழ்ந்து கிடக்கும் தனது புத்திரியைக் காட்டி அவள் நோயைத் தீர்த்து அருள் புரியுமாறு சுவாமிகளை வேண்டினான். உடனே இறைவன் மீது "துணிவளர்திங்கள்" (பக்கம்-எக) என்ற பதிகம்பாடி திருஞானசம்பந்தர் அவள் நோயைத் தீர்த்தருளினார். பிறகு பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்கொடிமாடச் செங்குன்றூரை யடைந்தார். ஆங்கு முன்பனிக்காலத்தில் ஒருவகையான விஷச்சுரநோய் வருவது வழக்கம். சுவாமிகளோடு வந்த அடியார் குழாங்களையும் அவ்விஷச்சுரநோய் பிடித்துக் கொண்டது. இதை யறிந்த சுவாமிகள் "அவ்வினைக்கிவ்வினை" (பக்கம் - கஅஉ) என்ற பதிகம் பாடி இறைவன் திருவருளால் அடியார்குழாங்களுக்குற்ற நோயைத் தீர்த்தது மட்டுமேயன்றி அவ்வூரிலும் எக்காலத்திலும் அவ்விஷச் சுரம் வாவொட்டாமல் திருவருள் புரிந்தனர்.

பிறகு பலதலங்களைத் தரிசித்துவிட்டு, திருப்பட்டீச் சரத்தை யணையும்போது வெயில் மிகுந்ததால் நிழல் தருவதற்கு ஆகாயத்தில் சிவபூதம் ஒன்று முத்துப்பந்தர் ஒன்றைத் தாங்கிற்று. பிறகு அப்பந்தர் இழிந்தது. பரிசனங்கள் அதைத் தாங்கிக் கொண்

187155

டார்கள். சுவாமிகளும் தில்லை மூதூராடிய திருவடி நீழலெனவே அம்முத்துப் பந்தர் நிழலை யெண்ணி, திருக்கோயில் சென்று "பாடன் மறை சூடன்" (பக்கம்-ருசஉ) என்னும் பதிகம்பாடிப் பலதலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தனர்.

ஆங்குறையு நாளில் சிவபாத விருதயர் வந்து வேள்வி செய்தற்குரிய காலம் வந்துவிட்டபடியால் பொருள் வேண்டுமென்று சுவாமிகளைக் கேட்டார். சுவாமிகளும் "அந்தமில் பொருளாவன ஆவடு துறையுள் எந்தையார் அடித்தலங்களன்றோ" என்ற கருத்துத் தோன்ற "இடரினுந்தளரினும்" (பக்கம்-சகூஉ) என்ற திருப்பதிகத்தை ஓதினார். உடனே ஒரு சிவ பூதம் தோன்றி அகன் பீடத்துச்சி வைத்தது பசும்பொன் ஆயிரங் கிழி யொன்று. வைத்துவிட்டு முன்னின்று "நல்வாக்கால் உய்த்த இக்கிழி பொன்னுலவாக்கிழியுமக்கு நித்தனார் அருள் செய்தது" எனக் கூறி மறைந்தது. அதைத் தந்தையாரிடம் கொடுத்து "நல் வேள்வி தீதுநீங்க நீர் செய்யும்" என்றருளினார் திரு மகனார்.

பிறகு பல தலங்களை வணங்கித் திருநீலகண்டத்துப் பாணனார் தாய் பிறந்த ஊராகிய தருமபுரத்தைத் திருஞானசம்பந்தர் அடைந்தார். அவ்வூரில் பாணனார் சுற்றத்தார் பாணனார் திருத் தொண்டை வியந்து "திருப்பதிகத்திற்கிளர்ந்த வோசை, அளவு பெறக்கருவியின் நீர் அமைத்தியற்று மதனாலே யகிலமெல்லாம், வளர இசை நிகழ்வதென" விளம்பினார்கள். பாணனார் உளநடுங்கித் "திருப்பதிக இசையளவுபடா வகையை இவர்களும் உலகத்தவரும் அறியுமாறு ஒரு பதிகம் பாட வேண்டும்" என்று திருஞானசம்பந்தரை வேண்ட, சுவாமிகளும் "மாதர் மடப்பிடியும்" (பக்கம்-உகஎ) என்னும் யாழ்மூரிப் பதிகம் பாடினார். அப்பதிகம் இசையாழில் அடங்காதது கண்ட பாணனார் யாழை யுடைக்க ஓங்கினார். உடனே சுவாமிகள் அதனை வாங்கி "ஐயரே, அம்மையப்பர் திருவருளின் பெருமை யெல்லாம் இக்கருவியினில் அளவு படுமோ? இயன்றவரையிலேயே வாசிப்பீர்" என்று மீண்டும் யாழைப்பாணனாரிடம் தந்தார். அதைப் பெற்றுப் பாணனார் வழக்கம்போல் சுவாமிகட்கு யாழ்த்தொண்டு புரிந்திருந்தனர்.

இதன் பின்னர் பலதலங்களில் இறைவனை வணங்கி, சுவாமிகள் திருமருகலை யடைந்தார். ஆங்கு, கோயிலுக்கெழுந்தருளும்போது ஒரு அழுகுரலோசைகேட்டது. தன்னை மணந்து கொள்ளக்கருதிய வணிகனுந்தானுமாக வர, வழியில் அவ்வணிகன் பாம்பு கடித்திறக்கத் திக்கற்றவளுக்குத் தெய்வமே துணையென்று ஒரு பெண் கதறியழுங் குரலோசை அதுவென்பதை யறிந்த சுவாமிகள் "சடையாயெனுமால்" (பக்கம்-உசகூ) என்னும் பதிகம் பாடி விஷத்தையிறக்கி அவ்வணிகனை உயிர்ப்பித்தனர். சுவாமிகளின் திருவடிகளில் இருவரும் வீழ்ந்து வணங்கவும், அவர்கட்குப் "புகலிவேந்தர், மணம்புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்." பிறகு சிறுத் தொண்ட நாயனார், முருக நாயனார் வேண்டு கோள்களுக்கிணங்கித் திருச்செங்காட்டங் குடியையும், திருப்புகலூரையும் தரிசித்து ஆங்கு திருநாவுக்கரசு சுவாமிகளைக் கண்டு ஆரூர் திருவாதிரைவிழாச் சிறப்பை அவர் கூறக்கேட்டுத் திருவாரூர்சென்று வணங்கி, பின் சில தலங்கட்குச்சென்று திருவீழி மிழலையை அடைந்தார். ஆங்குள்ள சிவபெருமான் காழி நகர்த் தோணியப்பரைப்போல் காட்சி கொடுத்ததைக்கண்டு களித்து அவ்வூரிலேயே சில காலம் தாமும் நாவுக்கரையருமாகத் தங்கியிருந்தார்கள். அப்போது பஞ்சக் கொடுமையால் அடியார் குழாங்கள் வருந்த, கடவுள் கோயிலுள் இரண்டு பீடங்களில் தினந்தோறும் பஞ்சம் முடியுமளவும் ஒவ்வொரு பொற்காசு தந்து உதவினார். அக்காசுகளைப் பெற்றுத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தனித் தனியே தங்கள் திருமடங்களிற் சிறப்பாக அடியவர்க்கு அமுதளித்து வந்தனர். தாம் பெற்ற காசுகள் வாசியின்றி (வட்டமில்லாமல்) மாறாததைக் கண்ட திருஞானசம்பந்தர் "வாசி தீரவே" (பக்கம்-கசஅ) என்ற பதிகம் பாடி நற்காசு பெற்றனர்.

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரையரும் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருமறைக் காட்டை யடைந்தார்கள். ஆங்குள்ள திருக்கோயிலின் கதவு மறைகளால்



அடைக்கப்பட்டிருந்தது. அடியார்களெல்லாம் வேறொரு திட்டு வாசல் வழியாகவே செல்லும் வழக்கம் ஏற்பட்டது. இதைக்கண்ட இருகுரவருள் அப்பர் சுவாமிகள் திறக்கும்படி பாட, சம்பந்த சுவாமிகள் "சதுரம் மறைதான்" (ப-உஎக) என்ற பதிகம்பாடி மூடவும் செய்தார். பிறகு அக்கதவு மற்றைக்கதவுகளைப்போல் திறக்கவும் மூடவும் இசைந்திருந்தது. இருவரும் திருமறைக் காட்டிலேயே சிலகாலம் வீற்றிருந்தார்கள்.

அப்போது ஒரு நாள் பாண்டி நாட்டிலிருந்து சில அடியார்கள் வந்து திருஞானசம்பந்தரை வணங்கி "ஐயனே, எங்கள் நாட்டில் சைவம் மறைந்துவிட்டது. சமண சமயமே விளங்குகிறது. மன்னனும் அச்சமயத்திற் புகுந்து சைவத்துக்குக்கேடு விளைக்கிறான். குலச் சிறையார் என்ற அமைச்சரும் மங்கையர்க்கரசியார் என்ற பாண்டிமா தேவியாரும் உளம் புழுங்கிச் சைவத்துக்குற்ற குறையை நினைந்து நினைந்து வருந்துகிறார்கள். தங்கள் நல்வருகையை வேண்டுகிறார்கள். தாங்களே சமணசமயத்தைவென்று மீண்டும் சைவத்தை நிலைநாட்டவல்லவர்கள் என்று திண்ணமாய் நம்புகிறார்கள். தாங்கள் பாண்டி நாட்டுக் கெழுந்தருளி எங்களைக் காத்தருள வேண்டும்" என்று மிகப்பணிவுடன் கூறினார்கள். இதைக்கேட்ட திருஞானசம்பந்தர் அவர்கட்கு அருள்புரிந்து வருவதாக!ஒப்புக்கொண்டனர். இதையறிந்த நாவுக்கரையர் "நீவிர் சிறு பாலர், வயதுமுதிர்ந்த என்னையே எவ்வளவோ துன்புறுத்தியவர்கள் சமணர்கள். மேலும் இதுபோழ்து நாளும் கோளும் சரியாகவில்லை. போதல்கூடாது" என்று நட்புரிமை பற்றித் திருஞானசம்பந்தரைத் தடுத்தார். "திருவருள்வழி நிற்கும் சிவனடியவர்க்கு நாளும் கோளுந் தீமைவிளைக்கமாட்டா" என்று கூறி "வேயுறு தோளி பங்கன்" (பக்கம்-௬கக) என்ற பதிகத்தைப்பாடி அப்பரிடம் விடைபெற்று மறைக் காட்டீசனை வணங்கிப் பல தலங்களை வழியிலே தரிசித்துத் திருஞானசம்பந்தர் பாண்டி நாடடைந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரைமா நகரத்தின் எல்லைக்கருகில் வருவதையறிந்த மங்கையர்க்கரசியார் சுவாமிகளை எதிர்கொண்டழைத்தற்காகக் குலச்சிறை நாயனார் என்னும் மந்திரியாரை அனுப்பிவைத்தார். மந்திரியாரும் சென்றழைத்தார். சுவாமிகள் திருவாலவாய் எப்புறமிருக்கிறதென்று வினவினார். கோபுரங்கள் சோலைகளிடையே தோன்றும் பக்கத்தைச் சுட்டினர் குலச்சிறையார். சுவாமிகளும் "மங்கையர்க்கரசி" (பக்கம் ௬கரு) என்னும் பதிகத்தைப்பாடி, திருவாலவாயைத் தொழுது உட்புகுந்து திருக்கோயில் சென்று வணங்கி, மங்கையர்க்கரசியாரையும் கண்டுமகிழ்ந்து ஒரு திருமடத்தில் பரிவாரங்களோடு தங்கியிருந்தனர். இராப்பொழுது தொடங்கியதும் சிவனடியார்கள் தமிழ்மறை முழக்கம் தொடங்கினர். அதனைக் கேட்கப்பொறாத சமண அடிகண்மாரெல்லாம் ஒருங்கு சேர்ந்து அரசனிடம் சென்று "மதுரையிற் சைவ வேதியர்தாம் மேவலாலின்று கண்டு முட்டியாமென்று" விளம்பினர். "என்று கூறலுங் கேட்டு முட்டி யானுமென்றியம்பி" வேந்தன் மேலே செய்ய வேண்டுவது யாதெனக் கேட்டனன். சமண அடிகள் அதற்கு "நம்மை வாதில் வெல்ல வந்த இவன் தங்கியிருக்கும் மடத்துக்கு மந்திரத்தினால் தீயிடுவதே சாலும்" என்றனர். "அவ்வாறே விரைந்து செய்யுங்கள்" என்றான் அரசன். சமணர்கள் ஓதிய மந்திராக்கினி பஞ்சாக்ஷரத்தின் முன் பயன்படவில்லை. திருமடம் தீப்பற்றவில்லை. இதையறிந்த சமணர்கள் உடனே தீயையெடுத்துச் சென்று திருமடத்தின் ஒரு பக்கலில் இட்டார்கள். அப்பக்கம் தீப்பற்றி யெரிந்ததைக் கண்ட அடியவர் திருஞானசம்பந்தரிடம் முறையிட, சுவாமிகளும் "இந்தத் தீ அரசனை மெல்ல அடைந்து அவனுக்கு ஆகவேண்டியவைகளைச் செய்யட்டும்" என்று திருவுளங் கொண்டு "செய்யனே திருவாலவாய்" (பக்கம்-௫0கூ) என்ற பதிகத்தை ஓதியருளினார். உடனே திருமடத்திலிட்ட தீ அணைந்து, வெப்பு நோயாக மாறி, பாண்டிய மன்னனைத் துன்புறுத்தத் தொடங்கிற்று.

அவ்வெப்பு நோய் தாங்கப்பொறாத அரசன் பல வைத்தியர்களையும் சமண மந்திர வாதிகளையும் கொண்டு சிகிச்சை செய்துகொண்

டும் நோய் ஒரு சிறிதும் குறையாததை யுணர்ந்து தனது அரசியாரையும் மந்திரி குலச்சிறையாரையும் வரவழைத்து விசாரித்தான். திருஞான சம்பந்த சுவாமிகள் மடத்துக் கிட்ட தீயினுல் தான் இவ்வெப்புநோய் வந்ததென்றும் அந்த சுவாமிகளே இந்நோயைத் தீர்க்க வல்லாரென்றும் அவர்கள் கூறினுர்கள். மன்னனும் ஆங்குக் கூடியிருந்த சமணர்களை நோக்கி "இவர் செய்கையெல்லாம் இன்னவாறெய்து நோய்க்கே யேதுவாயின வென்றெண்ணி", "யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கஞ் சார்வன்" என்று கூறித் திருஞானசம்பந்தரை அழைத்து வரும்படி மந்திரியாருக்குக் கட்டளையிட்டான். உடனே குலச்சிறையார் திருமடம் சென்றழைத்தார். சுவாமிகள் கோயிலுக்குள் சென்று "காட்டு மாவதுரித்து," "வேதவேள் வியை நிந்தனே" (பக்கம்-ரு00, ருகூஎ) என்ற பதிகங்களை ஓதி இறைவன் திருவுள்ளத்தை யறியவேண்டி நின்றுர். உடனே "நாதர் தம்மருள் முன்பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்கப் போதுவார் பணிந்து போற்றி விடைகொண்டு," திருநீற்றின் கோலத்தோடு அரண்மனை வாயிலை அடைந்தார். உடனே குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் சுவாமிகளை வரவேற்று அரசனிடம் அழைத்துச் சென்றுர்கள். அரசனும் சுவாமிகளைக் கைகூப்பி வணங்கித் தன் தலைப்பக்கத்தில் ஒரு பொற்பீடத்திலிருக்கச் செய்தான். தங்கள் ஊர் எதுவென்று சுவாமிகளை அரசன் வினவ, சுவாமிகள் "பிரமனூர் வேணுபுரம்" (பக்கம்-௩௩ரு) என்ற பதிகமோதி ஸ்ரீகாழியின் பன்னிரு பெயர்களையும் தெரிவித்தனர்.

சமணர்கள் வாதில்வெல்ல எண்ணி "கோலுநூலெடுத்தோதித் தலை திமிர்ப்பக் குரைத்தார்கள்." சுவாமிகள் "பேசுதிர் நும் பொருளெல்லை யுள்ளவாறு" என்றுர். உடனே சமணர்கள் "துள்ளி யெழுந்தனே கராய்ச் சூழ்ந்து பதறிக் கதற", மங்கையர்க்கரசியார் இவ்விளம் பிள்ளையைத் துள்ளியெழும் குண்டர்கள் யாது செய்வார்களோ வென்று அஞ்சினுர். இது கண்ட சுவாமிகள் "மானினேர் விழி" (பக்கம்-சஅஅ) என்ற பதிகம் பாடி அரசியாரைத் தேற்றினுர். அரசனும் சமணர்களை நோக்கி "வேறுவா தென்கொல் என்மேல் வெப்பொழித்து" "நீங்கள் தேறிய தெய்வத்தன்மை யென்னிடைத் தெரிப்பீரென்றுன்." சமணர்கள் அரசனது இடப்பக்கத்துள்ள வெப்பத்தை மந்திரத்தால் நீக்குவதாகக் கூறி, முயன்று தோற்றுர்கள். உடனே அரசன் திருஞானசம்பந்தரை நோக்க, சுவாமிகள் இறைவனை நினைந்து "மந்திரமாவது நீறு" (பக்கம்-௩உக) என்னும் திருப்பதிகத்தைப்பாடித் தமது கையால் மன்னன் வலதுபக்கத்தில் திருநீறு பூசினுர். உடனே வலதுபக்கத்திலிருந்த வெப்பம் நீங்கித் தடாகம்போல் குளிர்ந்தது. அவ்வெப்பம் இடதுபக்கம் சென்று இரட்டித்தது. அப்பக்கலில் நின்ற சமணர்களையும் அவர்கள் கையிலிருந்த மயிற்பீலிகளையும் சுட்டது. அரசன் அவர்களை நோக்கி "நீங்கள் தோற்றீர்கள், செல்லுங்கள்" என்றுகூறி, சுவாமிகளை நோக்கி வெப்பு முழுமையும் நீங்குமாறருளவேண்டினுன். சுவாமிகளும் மற்றொரு முறை திருநீற்றைத் தடவி அவ்வெப்பு நோயை முழுமையும் போக்கினுர். அரசன் சுவாமிகளை வணங்கினுன். ஏசற்ற சமணர்கள் தீயில் நீரில் வெல்வ தென்றெண்ணினுர்கள். இதையறிந்த சுவாமிகள் "உங்கள் வாய்மை பேசுமின்கள்" என்று வாதுக்கழைத்தார். சமணர்கள் "தருக்கவாதம் வேண்டாம். கண்ணுக்குப் புலனுகும் வாதத்தால் வெல்வோம்" என்றுகூறித் தத்தம் சமயவுண்மையை ஏட்டிலெழுதித் தீயிலிட்டு, பச்சென்றிருக்குமேடு வென்றதாகவும் எரிந்த ஏடு தோற்றதாகவும் கொள்வோ மென்றுர்கள். சுவாமிகளும் இதற்கு உடன்பட்டார்கள். உடனே தமது பதிகங்கள் எழுதப்பெற்ற ஏட்டுப் புத்தகத்தை யெடுத்துக் கயிறுசாற்ற "போகமார்த்த பூண்முலையாள்" (பக்கம்-எக) என்ற திருநள்ளாற்றுப்பதிகம் கிடைத்தது. அவ்வேட்டைக்கையிலெடுத்து நள்ளாறரை நினைந்து வணங்கித் "தளிர்இளவளரொளி......... நள்ளாறர் நாமமே, மிளிர்இளவளர் எரியிடிலிவை பழுதிலை மெய்ம்மையே" (பக்கம்-ருகூச) என்ற பதிகத்தைப்பாடி அனைவரும் காணத் தீயிலிட்டனர். அவ்வேடு வெந்து எரியாது பச்சையாய் விளங்கிற்று. சமணர்



கள் தங்கள் பொருள் வரைந்த ஏட்டை உய்யுமோ என்ற அச்சமிகுதியோடு தீயிலிட்டார்கள். அது பஞ்சு தீயினிற்பட்டதுபோல் வெந்து சாம்பலாயிற்று. இதைக்கண்ட சமணர்கள் "இருமுறை போதாது, மூன்றும் முறை வாதுசெய்தல்வேண்டும்" என்றுர்கள். சுவாமிகள் "இனி என்னவாது செய்வது" என்றுர். தத்தம் சமய வுண்மைகள் எழுதப்பெற்ற ஏடுகளை ஆற்றில்விட்டால், நீரோட்டத்தோடு ஓடுவது தோற்றது, நிற்பது வென்றது என்றுர்கள். சுவாமிகளும் நன்று செய்வோ மென்றனர். இதற்குள் குலச்சிறையார் இம்முறை தோற்றுரை என் செய்வதென்றுர். உடனே கோபமும் பொறுமையுங் கொண்ட சமணர்கள் "தங்கள் வாய் சோர்ந்து தாமே தனிவாதி லிழந்தோ மாகில், வெங்கழு வேற்றுவா னிவ்வேந்தனே" யென்று சொன்னுர்கள். இதைக் கேட்ட மன்னன் "செற்றத்தாலுரைத் தீருங்கள் செய்கையுமறந்தீரென்று" கூறி வைகை ஆற்றில் ஏடுகளை இடும்படி ஏவினுன். சமணர்கள் "அத்தி நாத்தி" என்றெழுதிய ஏட்டை ஆற்றிலிட்டார்கள். உடனே அது ஆற்றோட்டத்தோடு விரைந்து கடலுக்குச் சென்றது. இதைக்கண்ட சமணர்கள் தங்கள் தோல்வியையும் அச்சத்தையும் மறைப்பார் போல் "உங்கள் ஏட்டையும் ஆற்றிலிட்டால் தானே தெரியும்" என்று திருஞானசம்பந்தரைக் கேட்டார்கள். சுவாமிகளும் "வாழ்க அந்தணர்" (பக்கம்-ருகக) என்னும் பதிகத்தை ஒரு ஏட்டி லெழுதிக் கடவுளை நினைந்து ஆற்றிவிட்டார். அவ்வேடு "மருவுறும் பிறவியாற்றில் மாதவர் மனம் சென்றுற்போல்" எதிர்ந்து நீர்கிழித்துச் சென்றது. அதையெடுப்பதற்குக் குலச்சிறையார் ஓர் குதிரை மீதேறி விரைந்தோடினுர். சுவாமிகள் "வன்னியுமத்தமும்" (பக்கம்-சஎஎ) என்ற பதிகம் பாடினுர். ஓடுகின்ற ஏடு நின்று குலச்சிறையார் கையில் நட்டாற்றிற் கிடைத்தது. அவ்வேடு தங்கிய இடமே திருவேடகமாயிற்று. குலச்சிறையார் அவ்வேட்டைக் கொண்டு வந்து அரசன் முதலானவர்கட்குக் காட்டினுர். அரசனும் "முன்னமே பிள்ளையார் பால் அனுசிதம் முற்றச்செய்த" சமணர்களை "அவர்கள் ஒப்புக்கொண்டபடி கழுவிலேற்றி முறை செய்க" என்று மந்திரியாருக்குக் கட்டளையிட்டான். இதைக் கேட்ட திருஞானசம்பந்தர் "இகலில ரெனினும் சைவரிருந்து வாழ் மடத்திற்றீங்கு, தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலுமென்றே, மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடாதிருந்தார்." மடத்தில் தீவைத்த எண்ணாயிரம் சமணர்களும் கழுவேறினுர்கள். திருஞானசம்பந்தர் கொடுக்க வாங்கி மன்னன் திருநீறணிந்தான். "வேந்தனும் ஓங்குக" என்ற அளவில் தன் கூன் நிமிர்ந்தான். நாட்டுள்ளார் அனைவரும் திருநீறிட்டுச் சைவராயினர். திருநீற்றின் விளக்கத்தால் அமணிருள் பாண்டி நாட்டில் மாய்ந்தது.

பிறகு திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுத் தலங்களைத் தரிசித்துச் சோழநாடு போந்து பல தலங்கள் சென்று காவிரிக்கரையையடைந்து எதிரேயுள்ள திருக்கொள்ளம்பூதூர் செல்வதற்கு ஓடமேறி ஓடம் விடுவாரின்றி, "கொட்டமே கமழும்" (பக்கம்-சங௬) என்னும் பதிகம் பாடி ஓடம் தானுகச் செல்ல, அக்கரை சென்று வணங்கிப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு போதி மங்கை என்ற சமணர்கள் வாழூருக்கருகில் வந்தார். பரிவாரங்கள் அரன்நாமத்தை முழக்கினர். புத்த நந்தி என்பான் இதைப் பொறாது வெகுண்டு எதிர்த்தான். உடனே சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளும் பதிகங்களை அவ்வப்போது ஏட்டிலெழுதும் அன்பர் (இவர் சுவாமிகளின் நல்லம்மானுகிய சம்பந்த சரணலையர் என்று கூறுவது வழக்கு) "புத்தர் சமண் கழுக்கையர்" (பக்கம்-சகூ௩) என்ற பஞ்சாக்கரப் பதிகத்து அமண் பாட்டைப்பாடி இவன் தலையில் இடிவிழுகவென்ற அளவில் இடிவிழுந்து புத்தநந்தி இறந்தான். இவ்வன்பரே அங்குள்ள சமணர்களோடு வாதம் செய்தும் வென்றுர்.

பிறகு பல தலங்களைத் தரிசித்து அப்பர் சுவாமிகளைக் காணவேண்டி, திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தியை யடைந்தார். அப்பர் சுவாமிகள் ஒருவருங் காணுதபடி முத்துச் சிவிகையைத் தாங்குவோருடன் கலந்து தாங்கினுர். சுவாமிகள் அப்பர் எங்கேயென

வினவ, அப்பர் சுவாமிகளும் ‘தங்கள் சிவிகையைத் தாங்கும் பாக்கியம் பெற்றிங் குற்றேன்’ என்றார். உடனே இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்து சில நாள் அங்கேயே தங்கி யிருந்தனர். பாண்டிநாட்டுச் செய்திகளையெல்லாம் அப்பர் சுவாமிகள் திருஞானசம்பந்தரிடம் நேரிற் கேட்டறிந்தார். தாம் தொண்டை நாட்டுத்தலங்களைத் தரிசித்த செய்தியைத் தெரிவித்தார். பிறகு திருஞானசம்பந்தர் சில தலங்களைத் தரிசித்துத் தொண்டை நாட்டுக்குச் சென்றார்.

திருவோத்தூரில் ஒரு சிவனடியார் வைக்கும் பனைமரங்களெல்லாம் ஆண்பனைகளாகக் காயாது நிற்பதைக்கண்ட அமணர்கள் அவரை இகழ்ந்தார்கள். அவர் திருஞானசம்பந்தரிடம் சென்று வணங்கித் தமக்கருள் புரியுமாறு வேண்டினார். சுவாமிகள் “பூத்தேர்ந்தாயன” (பக்கம் - அஎ) என்ற பதிகம்பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினார். இதுகண்ட சமணர்கள் நாட்டைவிட்டகன்றனர். பிறகு பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு சுவாமிகள் திருக்காளத்தி சென்று வணங்கி ஆங்கிருந்தே கயிலாயம், கேதாரம், கோகர்ணம், இந்திர நீல பருப்பதம், பருப்பதம், அநேகதங்காபதம் என்ற தலங்களை நினைந்து பதிகம்பாடி திருவேற்காடு, திருவலிதாயம் என்ற தலங்களை வணங்கித் திருவொற்றியூரடைந்து பதிகம்பாடி ஆங்கே தங்கியிருந்தார்.

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்ற பெருவணிகர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பூம்பாவை யென்ற ஒரேபெண் இருந்தாள். மதுரையில் திருஞானசம்பந்தர் சமணரை வென்ற செய்தி முதலியவற்றைக் கேட்ட சிவநேசர் “எனது பெண்ணையும் பொருளையும் திருஞானசம்பந்தருக்கே அர்ப்பணம் செய்தேன்” என்றார். பூம்பாவை கன்னிமாடத்தில் பூக்கொய்யும்போது பாம்பு கடித்திறந்தாள். புகலியர்கோனுக்கர்ப்பணம் செய்யப்பெற்ற கன்னிகையை அன்னாரிடமே ஒப்புவிக்க வேண்டுமெனக் கருதிப் பூம்பாவைக்கு ஈமக்கடன் முடித்து எலும்புகளையும் சாம்பலையும் ஒரு குடத்திலடைத்துக் கன்னிமாடத்தில் வைத்துப் பூசித்துத் திருஞானசம்பந்தர் வருகையைச் சிவநேசர் எதிர்நோக்கியிருந்தார். சுவாமிகள் திருவொற்றியூ ரடைந்ததைத் தெரிந்து “திருவொற்றியூரளவுந் துன்னுநீள் நடைக்காவணந் துகில் விதானித்து” இன்னம் பலவகையில் ஊரை அலங்கரித்துத் திருஞானசம்பந்தரைச் சிவநேசர் அழைத்துவந்தார். திருமயிலாப்பூரையடைந்து சுவாமிகள் திருக்கோயிலை வணங்கி இறைவன் திருமுன்பு நின்று என்புக் குடத்தைத் திருமதிற்புறவாயிலில் கொண்டு வருமாறு சிவநேசருக்குக் கட்டளையிட்டார். குடமும் அவ்வாறே கொண்டுவந்து வைக்கப்பட்டது. உடனே திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளை நினைந்து “மட்டிட்டபுன்னை” (பக்கம்-உகூ) என்னும் பதிகத்தைப்பாடத் தொடங்கினார். அப்பதிகத்தில் “போதியோ வென்னும், அன்னமெய்த் திருவாக்கெனும் அமுதம் அவ்வங்கம், துன்னவந்து வந்துருவமாய்த் தொக்கதக்குடத்துள்.” சுவாமிகள் சமண்பாட்டைப் பாடும்போது “கோற்றொடிச் செங்கை தோன்றிடக்குடமுடைந்து” எழுந்தாள் அங்கம்பூம்பாவை. பின்னர் சுவாமிகள் திருக்கடைக்காப்பையும் பாடியருளினார். இவ்வதிசயத்தைக் கண்டோரனைவரும் இறைவன் திருவருளை வியந்தனர். புறச் சமயத்தினர் கண்டு நடுங்கினர். தமக்கென்றே அர்ப்பணஞ் செய்யப்பெற்ற பூம்பாவையை மணந்துகொள்ளுமாறு திருஞானசம்பந்தரைச் சிவநேசர் வேண்டினர். “மற்றவர் தமக்கு வண்புகலி வாணர் நீர், பெற்ற பெண்விடத்தினால் வீந்த பின்னையான் கற்றைவார் சடையவர் கருணை காண்வர, உற்பவித்தலாலுரை தகாதென” மொழிந்தார். “அவ்வாறாயின் தங்களுக்கென்றர்ப்பணஞ் செய்த பாவையை மற்றெவர்க்கும் மணஞ் செய்விக்கேன்” என்று அங்கம் பூம்பாவையைக் கன்னிமாடத்திலேயே அமர்த்தினார் அவர் தந்தை. பூம்பாவையும் சிவத்தை மேவினாள்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமயிலாப்பூரிலிருந்து திருவான்மியூர் முதலிய பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு சீகாழியையடைந்தார். ஆங்கு சிவபாத இருதயரும் அவர் உறவினரும் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் முடிக்க வேண்டுமென்ற கருத்



தைத் தெரிவித்தார்கள். சுவாமிகள் இசையாது மறுத்தார். மீண்டும் அவர்கள் “வேதநெறியை நிலைநாட்டவந்த தேவரீர் வேள்விக்குத் துணைபுரியும் பொருட்டு ஒரு கன்னிகையை மணந்தருளவேண்டும்” என்று பணிவுடன் வேண்டினர். சுவாமிகள் அவ்வேண்டுகோளுக் கிணங்கினார். திருநல்லூர்ப் பெருமணத்தில் (இதுவே ஆச்சாபுரம்) வாழும் நம்பாண்டார் நம்பியின் திருமகளைப் பேசி முடித்துத் திருமணத்துக்குரிய ஏற்பாடுகளையும் அவ்வூரிலேயே செய்து முடித்தார்கள். திருநீலநக்க நாயனார் வேதவிதிப்படி திருமணவினைச் சடங்குகளைச் செய்தனர். மங்கல வாழ்த்தொலி முழங்கத் திருஞானசம்பந்தர் காதலியைக் கைப்பற்றினர். அக்கினியை வலம்வரும்போது அக்கினியாவார் சிவபெருமானே என்றெண்ணி, “இந்த இல்லொழுக்கம்வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும், அந்தமில் சிவன்தாள் சேர்வன் என்னும் ஆதரவு பொங்க” சுற்றத்தாரும் தொண்டர்குழாங்களும் புடைசூழத்திருக்கோயிலை யடைந்தார். “கல்லூர்ப் பெருமணம்” (பக்கம் - சுஉங) என்ற பதிகத்தை ஓதினார். உடனே சிவபெருமான் “காதலியும் நீவிரும் திருமணங்காணவந்தாரனைவரும் நம்பாற்சோதியிற் கலமின்” என்று திருவருள் செய்து திருக்கோயில் முழுமையும் அனைவரும் செல்லும் வரை சோதிமயமாக்கி அதில் ஒரு வழியையும் வகுத்தருளினார். சுவாமிகள் “காதலாகிக் கசிந்து” (பக்கம் - ரு0ங) என்ற நமச்சிவாயப் பதிகத்தை யோதி அனைவரையும் சோதியுட் செல்லும்படி கட்டளையிட்டார். உடனே திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருகநாயனார், சிவபாத விருதயர், நம்பாண்டார் நம்பி முதலிய அனைவரும் சோதியிற் கலந்தார்கள். எல்லாரும் புகுந்த பின்னர், வைகாசிமூல நன்னாளிலே,

“ காதலியைக் கைப்பற்றிக்
  கொண்டு வலங்கொண்டருளித்
தீதகற்ற வந்தருளும்
  திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி
  நண்ணி யதனுட் புகுவார்
போதநிலை முடிந்தவழிப்
  புக்கொன்றி யுடனானார்.”

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளைப் பற்றிய சில குறிப்புகள்

**(க) சுவாமிகள் திருப்பெயர்கள் :—**(1) பிறந்த ஊர்பற்றிக் காழி மன்னன், புகலியர்கோன், வெங்குருவேந்தன், தோணிபுரத் தோன்றல் முதலியனவும் (2) கோத்திரம்பற்றிக் கவுணியர்தங்குலதீபம் முதலியனவும் (3) ஞானப்பாலுண்டமைபற்றித் திருஞானசம்பந்தர், ஞானபோனகர், பாலறாவாயர் முதலியனவும் (4) பார்வதிதேவியார் குழந்தைக்குப்பால் தந்தமையாலும் சிவபெருமான்குமாரனாக எண்ணிப் பல திருவருள்கள் புரிந்தமையாலும் ஆளுடைய பிள்ளையார், புரமெரித்தார் திருமகனார், தெய்வஞானக்கன்று முதலியனவும் (5) புறச்சமயிகளை வென்றமையால் பரசமயகோளரி முதலியனவும் (6) மறைநெறிச் சைவத்தை நிலைநாட்டினமையால் மாமறைச்சிறுவர், சைவ மைந்தர் முதலியனவும் (7) செந்தமிழ் மறையோதினமையால் முத்தமிழ் விரகர் முதலியனவும் பிறவும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் சிறப்புப் பெயர்களாகும்.

**(உ) சுவாமிகள் காலம் :—** பல கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகளின் துணைகொண்டு சுவாமிகளின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதி (கி. பி. 601—650) யிலுள்ளதென ஆராய்ச்சியாளர்கள் முடிவு கூறுகின்றனர்.

**(ங) சுவாமிகள் வயது :—**ஈரமிலா அங்கமுயிர் எய்தவேற்றிய இறைவன் கருணையை சுவாமிகள் வியந்ததை “புண்ணியப்பதினாறுண்டுபேர்பெறும் புகலிவேந்தர், கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்” எனச்சேக்கிழார் கூறுகிறார். அங்கம்பூம்பாவை அற்புதம் நிகழ்ந்தவுடன் சுவாமிகள் சீகாழிசென்று திருமணம் புரிந்துகொண்டு சோதியிற் கலந்ததே நிகழ்ந்ததால் சுவாமிகளின் வயது பதினாறென்றே துணியப்படும்.

**(ச) சுவாமிகள் தேவாரத் தொகை :—** இது பதினாறாயிரம் பதிகமென நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார். இப்போதுள்ளவை

சமீபத்தில் கல்வெட்டொன்றிற் காணப்பட்ட திருவிடைவாய்ப் பதிகத்தையும் சேர்த்து, ௩௮௪.

**(௬) சுவாமிகள் தேவாரத்திற் கூறியுள்ள செம்பொருள் :—** சைவசித்தாந்த சமயத்திலுள்ள சிறந்த கொள்கைகளனைத்தையும் சுவாமிகள் தேவாரத்திற் காணலாகும். விரிக்கில் மிகப்பெருகும். சுருங்கக்கூறின், புறக்கண் கொண்டு நோக்குவார்க்குப் பல சரிதச் சான்றுகள், இயற்கைவனப்பு, இசைநுட்பம், நாட்டின் நிலை, மக்கள் நிலை, பழக்க ஒழுக்கங்கள், செய்யுள் நயம், அகத்துறைப்பாடலினிமை முதலிய பொருள்களும் அகக்கண் கொண்டு நோக்குவார்க்கு இறைவன் திருவருள் நெறியென்ற செம்பொருளும் காணப்படும்.

**(௭) சுவாமிகள் அவதாரபுருஷரா ? :—** முருகப்பெருமான் திருவவதாரமாகத் திருஞானசம்பந்தரைக் கொள்வது ஒருவகை வழக்கு. அருணகிரிநாதர் பாடல்கள் பல இவ்வழக்கை விளக்குகின்றன. " பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்ற உண்மைச் சைவக்கொள்கையுடையோர் திருமால் பத்து அவதாரங்களைப்போல் முருகன் அவதரித்ததாக ஒப்புக்கொள்ளார்; உபசாரமாகவே கொள்வர்.

**(௮) சுவாமிகள் காலத்தும் முன்னும் இருந்த நாயன்மார்கள்:** அறுபத்து மூன்று நாயன் மார்களுள் சண்டீசர், கண்ணப்பர், நமிநந்தி யடிகள், கோச் செங்கட்சோழர், தண்டியடிகள், புகழ்த்துணையார், முருக நாயனர், சிறுத் தொண்டர், நீல நக்கர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருநீல கண்ட யாழ்ப்பாணர் ஆகிய பன்னிருவரைப் பற்றித் தமது தேவாரத்திலேயே சுவாமிகள் பாடியுள்ளார்கள். இவர்களுள் பின்னர் கூறப்பட்ட அறுவரும் சுவாமிகளைக் கண்டு அவரோடிருந்து அளவளாவிய சீலர்கள். இவ்வறுவரே யன்றித் திருநாவுக்கரசு சுவாமிகளும், குங்கிலியக்கலயரும், நின்றசீர் நெடுமாறரும் சுவாமிகளைக் கண்டு இன்புற்றவர்களாவார்கள்.

**(௯) சுவாமிகள் சமய குரவராவார்:—** சுவாமிகள் பாண்டி நாட்டில் சமணரை வென்று சைவத்தை நிலை நாட்டாவிடில் " நீறெங்கே, மாமறை நூல் தானெங்கே எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே" என்ற வினாக்களுக்கு இல்லை யென்ற விடையே பகர வேண்டி யிருக்கும். எனவே சுவாமிகள் நம் சமயத்துக்குக் காலத்தாற் செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிதே யாகும். மேலும் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்தில் சைவ சமயக் கொள்கை நுட்பங்களையெல்லாம் ஒருங்கே காணலாகும். ஆகையால் சுவாமிகளைச் சைவ சமயாசாரியர்கள் நால்வரில் ஒருவராகக் கொள்வது ஆன்றோர் முடிபு.

**(௯) சுவாமிகள் நால்வருள் யாவர் ?:—** சைவ சமயத்தில் இறைவன் திருவருளையடைவதற்கு நான்கு சாதனங்கள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இவற்றையே தாச மார்க்கம், சத்புத்ர மார்க்கம், சகமார்க்கம், சன் மார்க்கம் என்பர் வடமொழியாளர். இவற்றுள் திருஞானசம்பந்தர் கிரியை யென்ற சத்புத்ர மார்க்கத்தை வற்புறுத்தும் சமய குரவர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற ஏனைய மூன்று சமய குரவரும் முறையே சரியை, யோகம், ஞானம் என்ற சாதனங்களை வற்புறுத்தும் சிறப்பினர் என்பது திருமுறை ஆராய்ச்சி யாளர் துணிபு.

**(௧௦) சுவாமிகள் வரலாறுகளும் புகழ் மாலைகளும் :—** திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்களில் சில குறிப்புக்களும், நம்பியாண்டார் நம்பிகளியற்றிய புகழ்மாலைகளும் புராண சாரமும், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமும், பிற்காலத்தவர் இயற்றிய பிள்ளைத் தமிழ் முதலிய பலவும் சுவாமிகளைப் பற்றிய வரலாறுகளும் புகழ்மாலைகளுமாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை யவர்களியற்றிய சரித்திரமும், திரு. சே. சிவஞானம் பிள்ளையவர்களியற்றிய சரித்திரமும் ஆராய்ச்சிக் குறிப்புகள் பலவும் மிகச் செவ்வையாக எழுதப்பட்டனவாகும்.

---

குறிப்பு :—இச்சரித்திரத்தில் தேவார முதற்குறிப்புக்களின் பின்னர் (பக்கம் ……) என்று குறித்துள்ளவை சமாஜத்தின் சம்பந்தர் தேவார சுத்தப்பதிப்பிலுள்ள பக்கங்களாம்.

# சம்பந்தரின் வானநூற் கல்வி

[E. T. சோக்கம்மாள், B.A., L.T.]

## 1. சம்பந்தர் காலத்திய வான நூல்

திருஞான சம்பந்தர் பிறப்பிடமாகிய சீர்காழிக்குப் பன்னிரண்டு திருநாமங்கள் உண்டென்று புகலிவேந்தரே சில பதிகங்கள் பாடி யிருக்கின்றார். அவற்றுள் "தோணிபுரம்" என்பது ஒன்றும். "தோணி" என்பது மரக்கலம். அதாவது, பாய் விரித்து ஓடுங் கப்பல். இக்காலத்தில் புகைக் கப்பல் போல் நீராவிச் சக்தியால் ஓடாது, இது காற்றின் ஓட்டத்தாற் செல்லும். இது காற்றிற்கு எதிர்ப் பக்கத்தில் மாத்திரம் செல்லாது, ஏனைய மூன்று பக்கங்களிலும் செல்லும். அக்காலத்தில் மரக் கலங்கள் ஓட்டும் மாலுமிகள் இக்காலத்திலுள்ள திசைக் காட்டி முதலிய கருவிகள் துணை யின்றிக் கோளங்களின் சாதக நிலையாலே, திசை, தூரம் முதலியன கண்டு வணிகம் நடத்தினர். ஆயினும் சிறு பான்மை கடற் பிரயாணம் அபாயமாகவே யிருந்தது என்பதை அடியிற் காணும் அப்பர் பாசுரத்தில் அநுமானிக்கலாம்.

" மனமெனுந் தோணி பற்றி
 மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
 செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
 மறியும்போ தறிய வொண்ணு
துனை யுனு முணர்வை நல்காய்
 ஒற்றியூருடைய கோவே ! "

—அப்பர் - திருவொற்றியூர் - திருநேரிசை.

ஆகையால் வான நூலில் அதிக சூட்சும அறிவு பெறுவது சம்பந்தர் காலத்தில் மாலுமிகளுக்கு இன்றியமையாததாயிருந்தது. மாலுமிகளின் அறிவு பெரும்பாலும் யாவருக்கும் உலகத்திலும் வெளிப் படையாகக் காணப்பட்டதுமாம். ஆகையால் சம்பந்தர் காலத்தில் வானநூல் அறிவு சாதாரணமான மனிதரும் பெற்றிருந்தார் என்பது, அக்காலத்திய பயிர்த் தொழிலாளிகள் பஞ்சங்களின் காரணத்தை அறிந்து அவற்றைத் தடுத்து சிறந்த விளைவு பூமியில் செய்து உலகத்தோரை உய்வித்ததால் விளங்கும். சம்பந்தர் தேவாரத்திலுள்ள சிற்சில பாசுரங்கள் அவர் காலத்தில் வழங்கி யிருந்த வானநூல் அறிவின் தன்மையை விளக்கும்.

## 2. வான நூலும் ஜோதிடமும்

திருஞான சம்பந்தர் ஜோதிட சாஸ்திரத்தின் உண்மைகளில் சில நன்குணர்ந்திருந்தார். அதைக் கோளறு திருப்பதிகத்திலுள்ள சில செய்யுட்களினின்றும் அநுமானிக்கலாம். புகலி வேந்தர், பாண்டி நாட்டுக்கு மங்கையர்க்கரசியார் அனுப்பிய வேண்டுகோளுக்கு இணங்கிச் செல்ல எழுந்த காலத்தில் அவருடன் வேதாரண்யத்திலிருந்த அப்பமூர்த்தி "தேவரீர் சிறு பிள்ளையாயிருக்கிறீர். சமணர்களோ வஞ்சகர். தங்களுக்கு இப்பொழுது கிரகங்கள் வலியில" என்று தடுத்தார். அப்போது பாடிய "வேயுறு தோளிபங்கன்" என்னும் திருப்பதிகத்தில் நவக்கிரக தோஷங்களும், நட்சத்திர தோஷங்களும் தம்மைச் சாராவென்றும், முதல் இரண்டு செய்யுட்களில் இவர் விளக்கியது காண்க.

187155

தமது திருவுள்ளத்தில் சிவபெருமான் குடி புகுந்ததால், ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி பாம்பிரண்டும் நல்லவை என்றும், அவை அடியார்க்கு மிகவும் நல்லவை என்றும் இருபத்தேழு நட்சத்திரங்களில் "ஒன்பது," "ஒன்று" "ஏழு" "பதினெட்டு" "இருபத்திநான்கு" முதலிய நட்சத்திரங்கள் பிரயாணத்திற்கு விலக்கப்பட்டனவென்றும் ஆயினும் அவை அடியார்க்கு அன்போடு நன்மை செய்யும் என்றும் கூறினார். ஆகையால் அக்காலத்தில் ஜோதிடமானது ஜனங்கள் மனதில் ஆழ்ந்திருந்ததென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. வான சாஸ்திர வழியே கோளங்களின் நிலையால் பூலோகத்திற்கும், மனிதர்களுக்கும் வரும் பயன்களைப் புகலிவேந்தர் கீழ் வரும் செய்யுளில் குறிப்பிடுகின்றார்.

" சனி புதன் ஞாயிறு வெள்ளி
திங்கட் பல தீயன
முனிவது செய்துகந் தானை
வென்றவ் வினைமூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல்
செய்த விராமேச்சுரம்
பனிமதி சூடிநின் றூடவல்ல
பரமேட்டியே "

## 3. சம்பந்தர்கால வானநூற் சிறப்பு

நமது காலத்திலுள்ள ஜோதிடநூல், முன்னோர் சரக்கைக் கொண்டு செய்யும் வியாபாரத்தை ஒக்கும். சம்பந்தர் காலத்து ஜோதிடமோ, வான நூல் இலக்கணத்தைக் கொண்டும் கோளங்களால் வரும் அனுபவத்தைக் கண்டும் விருத்தியடையும் ஒரு பயிரை ஒக்கும். அக்காலத்தில் தனித்தனி மாந்தர் வசிப்பதை விட்டுக்குடும்பங்களாய் வசித்தது போலத் தனியாய் மனிதர் ஜாதகங்களைப் பிரத்தியேகமாய்க் கணிப்பதில் மனதைச் செலுத்தாமல், கோளங்களால் உலகத்திற்கு ஏற்படும் பலனை முக்கியமாய் கவனிப்பவர்களாயிருந்தார். இது மூவர் தேவாரத்திலும் சிற்சில இடங்களில் குறிக்கப்பட்டன. பன்னிரண்டு இராசிகளில் உள்ளவை முறையே அஸ்வனி முதல் ரேவதி ஈறாக இருபத்தேழு நட்சத்திரங்களாதலால் ஓர் இராசிக்கு சராசரி இரண்டேகால் நட்சத்திரங்கள் ஏற்படும். இந்த நட்சத்திரங்களும் பெரும்பாலும் கூட்டங்களாவதால் அவைகளைப் பின்னங்களாக்க இயலும். ஆதலால் கார்த்திகை நட்சத்திரக் கூட்டத்தின் ஒரு பாகம் அஸ்வினி, பரணியுடன் சேர்ந்து மேஷ இராசியாயும், மற்றொரு பாகம் ரிஷபத்தின் கொம்பாகவும் நிற்கும். இந்த இராசிகளில் நவக்கிரகங்கள் முறையே பிரவேசிப்பதால் உலகத்திற்குப் பலன் வெவ்வேறும். திருவாதிரை ஞாயிற்றில் சேர நாட்டில் கோடை மழை தப்பாது பெய்யும். இன்றேல் மிளகு பஞ்சமாம். சூரியனும் கிருத்திகை நட்சத்திரமும் சம்பந்தமாகும்போது "கத்திரி" உஷ்ணம் உண்டாகும். இம்மாதிரியாகவே சூரியன் ஒவ்வோர் இராசியிலும் ஒவ்வொரு நட்சத்திர சம்பந்தமாகும் போது உண்டாகும் பலன்கள் வேறும். இவ்விருபத்தேழு நட்சத்திரங்களில் ஒவ்வொரு நட்சத்திரப் பிரவேசத்திலும் சூரியன் சுமார் $13\frac{1}{2}$ நாள் காணப்படுவான். இதன்றியும் திங்கள், செவ்வாய் முதலிய கிரகங்கள் இந்த இராசிகளில் பிரவேசிக்குங் காலத்தில் அவற்றிற்குத் தக்கவாறு பலன்களை முறையே விளைவிக்குமென்பதும் தேவாரத்திலுணரலாகும்.



மற்றும் தேவாரத்தினின்று அனுமானிக்கக் கூடிய சில உண்மைகளுமுள. அவையாவன: சந்திரன் $27\frac{1}{3}$ நாள்களில் 27 நட்சத்திரங்களைக்கடந்து செல்லுகின்றானாதலாலும் ஒரு தினத்திற்கு ஒரு நட்சத்திரமாவதாலும் அவன் பலன் அவ்வளவு விசேஷமாகக் காட்டப்படுவதில்லை. ஏனைய கோளங்களின் பலன்களில் இது பெரும்பாலும் ஒடுங்குமாயினும் திங்களின் ஆட்சி சில காலங்களில் விளங்குவதும் உண்டு. செவ்வாய் தனுஸ்(வில்) இராசியில் பிரவேசிக்கும்போது உலகத்தில் அரசர்களுக்குச் சண்டை நேர்வது சாதாரணமாம். எல்லாக் கோள்களிலும் சில காலம் வலிவாய் நின்று பெரும்பாலும் தீங்கு விளைவிக்கக் கூடியது சனிக்கிரகமாகும். மீனராசியில் சனி புகுமாயின் யாது விளையும் என்பது கீழ் வரும் சம்பந்தர் பாசுரத்தில் அனுமானிக்க.

" அலங்கல்மலி வான வருந்தானவரு
மலைகடலைக் கடையப் பூதம்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்ட
மணிகண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயல் மறந்து மீன்
சனிபுக் கூன்சலிக்குங் காலத்தானுங்
கலங்கலியா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே "

சிங்கராசியின் கண்ணாகிய மகத்தில் சனி புகுவானாயின் சிங்க நோக்கே போல் ஆவதற்கு மின்றி அழிவதற்குமின்றியிருக்கும் கருத்தைச் சுந்தரரும் "மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்" என்றும் திருவொற்றியூர் பதிகச் செய்யுளில் கூறுதல் காண்க.

எனவே சம்பந்தர் காலத்தில் வான சாஸ்திரக் கல்வியானது தற்காலத்தை விட மேன்மையதாய், வளருவதாய், விருத்தியடைவதாய், ஜோதிடத்தையொருபாகு பாடாயுடையதாய் இருந்ததென்பது திண்ணம். கோளறு திருப்பதிகத்தில் இரண்டாம் செய்யுள் பரணியை துருவனாகக் காட்டிக் கணக்கெடுப்பதும் சிலப்பதிகார காலத்தில் கிருத்திகை நட்சத்திரம் துருவனாயிருந்ததும் நாம் கவனிப்போமாயின் சம்பந்தர் கால நிர்ணயம் தற்கால ஆராய்ச்சியில் ஏற்பட்டது சரியாவென்று ஐயுற நேரும். இதை அறிஞர் ஆராய்க.

---

# திருஞானசம்பந்தரும், துறைத்தீந் தமிழும்

[கி. குப்புச்சாமி முதலியார்]

தமிழ்ப் பாஷையுள், ஏனைய பாஷைகளில் இல்லாத இலக்கணம் ஒன்று உண்டென்றும், அது பொருளிலக்கணம் என்றும் பலபாஷைகளில் வல்லவர்கள் கூறுகின்றனர். அதுவன்றியும், தமிழையே தமக்கு உயிர்க்குறுதி விளைக்கும் பாஷையென மகிழ்வோர், இப்பொருளிலக்கணத்தைப் பெரிதும் விரும்புகின்றனர். இதனை நாம் பலபடித்தாகக் கூறாது, குமரகுருபரர் கூறுகின்ற சில வாக்கியங்களையெடுத்துக் காட்டுவோம். அவையெவையோ வெனின், மீனாக்ஷியம்மன் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவத்துள் கலைமகள் துதி கூறுவார், "தெள்ளித் தெளிக்கும் தமிழ்க் கடலின் அன்பின் ஐந்திணையென எடுத்த இறை நூல் தெள்ளமுது கூட்டுணுமோர் வெள்ளோதிமத்தின் இருசீறடி முடிப்பம்" என்றும், வருகைப்பருவத்துள், "நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையே" என்றும்

கூறுவன வாகும். இப்பொருளிலக்கணத்திற்கு அமைந்த நூல்கள் தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனா ரகப்பொருள் முதலியன. இவற்றிற்கு இலக்கியம் திருக்கோவையார் முதலியன. இதனுள் அகம்புறமென இரண்டாகப் பொருளை வகுக்கினும், அகப்பொருளையே பெரிதுங் கொண்டு புலவர் பலர் மகிழ்வுற்றனர். இவ்வகப் பொருளினும், புணர்தல், பிரிதல், இரங்கல், இருத்தல், ஊடல் என்பனவற்றுள், பிரிவினுண்டாகும் இரங்கலையே சைவ வைணவர்கள் ஆகிய இருசமயத்தவரும் பெரிதும் பாடுகின்றனர். இதற்கு மணிவாசகர் பாடிய திருக்கோவையே பெரிதும் சான்றாகும். இச்சமய குரவர் திருக்கோவையார் மாத்திரமல்லாமல், தமது திருவாசகத்திலும் பல விடங்களில் இரங்கல் துறையைக் கூறுகின்றனர். இவர் தாமோ கூறுகின்றனரெனின், திருநாவுக்கரசு சுவாமிகளும் தமது தேவாரங்களுள் திருப்பழனத் தேவார முதலியவைகளில் அவ்விதமே கூறுகின்றனர். இதனையே சம்பந்த சுவாமிகள் தமது மூன்றாம் வயதில் தோணியப்பரைத் தரிசித்து ஞானப் பாலையுண்டவுடன், பாடுதற்கு ஆரம்பித்தனர். அது எவ்வாறோ வெனின், உலகத்து உயிர்களுள் ஒரு தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அன்பைக் காட்டிலும் அன்பென்பதை மற்றொருவரிடத்தும் காணுதல் கூடாதாதலால் உயிர்க்கு உறுதி தேடும் புலவனொருவனும் யார்க்கும் முதல்வனாக உள்ள இறைவனைத் தனக்குத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் பாடுவதுடன் புணர்ந்த தலைவன் அறுவகைப் பிரிவினுள் ஏதேனும் ஒன்றைக் கருதி, பிரிந்த பிறகு உண்டாகும் துன்பத்தை இரங்கலாகவும், அவ்வாறு பிரிந்த காலத்து, நாரை முதலிய பறவைகளைத் தூது விடுவதைத் தூதாகவும் கூறுவது வழக்காதலால், அவ்வழக்கையே சம்பந்தரும் பெரிதும் பாராட்டிப் பாடியுள்ளனர். இவ்வுண்மைகளை இவர்பாக்களில் ஆராய்வோம். அவையாவன :

திருஞான சம்பந்தர் தமது முதல் தேவாரத்துள், பத்துப் பாக்களுள், ஆண்டவனைக் கள்வன் கள்வன் கள்வன் என்கின்றனர். இவ்விதங் கள்வனெனக் கூறியது உயிர்க்கு உயிராய்த் தன்னுள் மறைந்துள்ள இறைவன், பக்குவமடைந்த காலத்து வெளி வந்து தன் மனதினைக் கவர்ந்தான் என்னும் பொருள்பட ஓதியதாயிற்று. அவ்விதம் வெளிவந்த கள்வன் தனக்குத் தலைவன் என்றும், அவனைக் கண்ட காட்சியால் "உடல்மெலிந்தது என்றும், மெலிவால் கைகளில் உள்ள வளையல்கள் கழன்றன நான் அவனுக்கென்றே உயிர்தாங்கி, மாலையிட்டு, மஞ்சள் பூசி, மயிர்முடி கோதி முடித்தேன்" என்றுங் கூறுவார், இப்பதிகத்தின் மூன்றாவது பாட்டில்,

"ஏர்பரந்த இனவெள்வளை சோர
என்னுள்ளங் கவர் கள்வன்"

என்றும்,

ஆறாவது திருப்பாட்டில்,

"இறை கலந்த இனவெள்வளை சோர
என்னுள்ளங் கவர் கள்வன்"

என்றும் எடுத்துக் காட்டினார். தாம் மூன்று வயது குழந்தையாக இருந்தும், "கன்னிகை யொருத்தி சிற்றின்பம் வேம்பெனினும் கைக் கொள்வள் பக்குவத்தில்" என்றபடி, இறைவனைத் தரிசிக்கத் தகுந்த சத்தினி பாதம்



பெற்ற பெரியார் என்பது காண, காட்சித் துறையைப் பாடினர்.

இம்முதற் பதிகத்துள் மாத்திரமல்லாது, திருத்தோணிபுரம் என்று பாடுகின்ற பதிகத்துப் பத்துப் பாக்களுள்ளும் தலைவனைப் பிரிந்த தலைவி வண்டு முதலிய உயிர்களைத் தூது விடுவது போல் பாடுகின்றனர். இப்பதிகத்தின், "வண்டரங்கப் புனல் கமல மதுமாந்தி, பெடையினொடும்" என்னும் முதற் பாட்டில், ஒரு வண்டை நோக்கி, "ஓ வண்டே! நீ இங்குள்ள தாமரைகளின் தேனினை யுண்டு, உனது பேடையொடு இசைபாடி நிற்கின்றாய்! எக்காலத்தும் பேடையொடு இருந்து பிரிவு என்பது இதுவென அறியாத நீ, பிரிந்திருக்கின்ற எனது துன்பத்தை யறியாய். ஆயினும், தோணிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் என் தலைவனுக்கு என் நிலைமையைப் பிரிந்திருப்பதால் இதுவாகும் என்று என் மீதுள்ள அன்பால், ஒருமுறை சென்று கூறாயோ!" என்றும் கூறினார்.

இரண்டாவது பாட்டினுள், "எறி சுறவங் கழிக்கானல் இளங்குருகே!" என்று கொக்கை நோக்கி, "என் தலைவன் என் துன்பம் இதுவென்று சிறிதும் அறியாது பிரிந்திருப்பது என் தீவினையின் பயனன்றோ! ஆயினும், தோணிபுரத்து உறையும் அவனுக்கு என் துன்பத்தினை யுணர்த்துவாயாக" என்றும், மூன்றாவது பாட்டில் சேவற்கோழி யொன்றனை நோக்கி, "ஓ சேவலே! என் தகுதியிது வென்று தோணி புரத்து உறையும் என் தலைவனுக்கு உரைத்தால் உனக்குப் பழி நேருமோ! எவ்விதமேனும் உரையாய்" என்றும், நான்காவது பாட்டில், நாரையொன்றினை நோக்கி, "யாவரும் விரும்பிக் காணக்கூடிய சிவந்த கால்களையுடைய மென்மையாகிய நாராய்! தோணி புரத்துறையும் என் தலைவனுக்குத் தன் பிரிவின் ஆற்றாமையால், தனங்கள் பசலை பூத்து நின்றாள் தன் தலைவி என்று உணர்த்துவாயாக" என்றும், ஐந்தாவது பாட்டில், "கருநிறம் வாய்ந்த பவளம் போன்ற கால்களையுடைய புறவினங்களே! தோணி புரத்துறையும் என் தலைவர் என்னை மற்றுமோர் முறை பார்க்கவில்லையாதலால், என் நிலைமை இதுவென்று அவர்க்கு உணர்த்துங்கள். அதற்காக உங்களைத் தொழுகின்றேன்" என்றும், ஆறாவது பாட்டில், "தாமரையில் வீற்றிருக்கும் அன்னங்காள்! வானுலகத்தும் மண்ணுலகத்தும் வேதங்களின் பயன் ஈதென அறிவித்த தோணி புரத்துத் தலைவனது, காலனையுதைத்த திருவடியினை நான் கூடும் வண்ணம் போய்ச் சொல்லீரோ" என்றும், ஏழாவது பாட்டில், "ஓ அன்றில்காள்! நீங்கள் ஒரு காலத்தும் பேடைவிட்டு ஆணும், ஆணை விட்டுப் பேடும் பிரிந்து அறியாதீர் என்று அறிவேன். ஒரு தாம் கூவி முடிவதற்குமுன் வந்து கூடி மகிழும் நீங்கள் பிரிவு என்பதை அறியீராயினும், தென்றற் காற்று வீசும் தோணிபுரத் துறைகின்ற என் தலைவனுக்கு அவன் பிரிவால் எனக்கு உண்டாகும் துன்பத்தைச் சொல்லுங்கள்" என்றும், எட்டாவது பாட்டில், "ஓ மாஞ்சோலையிலுள்ள குயில்காள்! நீங்கள் கூவும் கூச்சலால் நீங்கள் அடையும் இன்பம் மாத்திரமன்றி, ஏனையோரையும் இன்பமடையச் செய்கின்றீர்களாதலால், அத்துணை இனிய குரல் கொண்டு, தோணிபுரத்துறை

யும் என் ஈசனை என்னிடத்தேவரச் செய்ய ஒரு கால் கூவமாட்டீரோ'' என்றும், ஒன்பதாவது பாட்டில், "ஓ அழகு வாய்ந்த பூவையே! உன்னைத் துதிக்கின்றேன். தோணிபுரத்துறையும் என் விகிர்தனுயிருக்கின்ற தலைவனுக்கு என் உண்மைத் துன்பத்தை விளம்புவாயாக'' என்றும், பத்தாவது பாட்டில், "ஓ இளமை தங்கிய கிளிப்பிள்ளாய்! நீ இங்கே வருவாயாக! தேனையும் பாலையும் முறையாகவே உண்பதற்கு உனக்கு யான் தருவேன். கடலால் சூழப்பட்ட தோணிபுரத்துறையும் இளம்பிறையைத் தரித்த பெருமானின் திருநாமத்தை யான் கேட்கும்படி ஒரு கால் பேசாய்'' என்றும் எல்லாத் தூதையும் விளம்பினர்.

திருச்செங்காட்டங்குடியில் சென்று ஆண்டவனைப் பாடுங் காலத்து, பத்துப் பாட்டிலும், எல்லாப் பறவைகளையும் தூது விட்டதுபோல் பேசிஙு சிறப்பாக நாரையை‌ே"கூவி இரங்கியது ே.. கூறுகின்றனர். இவ்விதம் இச்சமய குரவர் கூறுவதை நோக்க, சைவ சமயத்தின் தன்மை ஈதென அறிவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானங்கள் அடங்கிய பாக்களை யோதியது மாத்திரமல்லாமல், தமிழின் சுவையும், அன்பின் பெருக்கமும் ஈதென அறிந்து ஆன்மாக்கள் உய்வதற்குத் துறைத்தீந் தமிழிலும் ஓதினர் என்று உணர்கின்றோம். என்னை! தமது மூன்றாவது வயதில் இறைவனை அம்பிகையோடு, ஆனேற்றின்மீது தரிசித்த இப்பெரியார், "ஒல்லும் வகையான் அறவினை யோவாதே செல்லும் வாயெல்லாஞ்செயல்'' என்னும் அருமைத் திருவாக்கின்படி மனோ வாக்குக் காயங்களால் யாவரும் தொழவேண்டும் என்று அறிவிப்பார்,

" நீ நாளும் நன்னெஞ்சே நினை
 கண்டாய் யாரறிவார்
சாளும் வாழ் நாளும் சாய்க்
 காட்டெம் பெருமாற்குப்
பூ நாளும் தலைசுமப்பப் புகழ்
 நாமம் செவி கேட்ப
நா நாளும் நவின் றேத்தப்
 பெறலாமே நல்வினையே''

என்றுங் கூறினர். இதன்றியும், ஏனைய தேவர்களெல்லாம் செத்துச் செத்துப் பிறக்கின்ற தன்மையரென்றும், ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி இவன் ஒருவனே என்றும் கூறுவார்,

" புலனைந்தும் பொறி கலங்கி நெறி
 மயங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
 அருள்செய்வான், அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
 முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்
 பார்க்குந் திருவை யாறே''

என்றுவிதந்துகூறினர். இதையெல்லாம் நோக்குங்கால், இறப்பவும் பலவாய யாக்கைகளில் பிழைத்து இம்மானுட யாக்கையைப் பெற்ற நாம் சத்சமயமாகிய சைவ சமயத்தை நல்வினைப் பயனால் பெற்றதுடன், பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் ஓதி யுணரும் அறவினையையும் பெற்றோம். அவ்விதமே மக்கள் யாவரும், இச்சம்பந்தப் பெருமானது திருவாக்கினையும் ஏனைய திருமுறைகளையும் ஓதி உய்வார்களென்று எல்லாம்வல்ல இறைவனை யிறைஞ்சுதலைக் காட்டிலும் வேறு பணியில்லையென்று அறிகின்றோம்.

---

# சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கையர்

[E. T. இராஜேஸ்வரி அம்மாள்]

இப்பத்திரிகையில், திருஞான சம்பந்தரைப் பற்றிய விஷயமே வெளி வரவேண்டுமென்பது பத்திராசிரியர் கருத்தாதலால் இங்கு மங்கையர்களுக்கென்று சில பக்கங்கள் இதில் அமைப்பதும் அவசியம் அன்றோ? புகலிவேந்தர் காலத்தில் இருந்த பெண்மணிகளால் நமது சமயத்துக்கு ஏதேனும் உதவி நேர்ந்ததோ என்பதையும், அவர் காலத்தில் பெண்களின் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதையும் சிறிது ஆராய்வோமாக. சம்பந்தர் காலமா∘.து அப்பர் காலம். ஆதலால் சோழ பாண்டிய நாட்டுப் பெண் கல்வி நிலைமை இங்கு காணல் விஷயத்திற்குப் புறம்பன்றாம்.

மறையோர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தினரில் மறையோர் குலத்தில் பெண்மணிகள் மிகவும் கல்வியும் கற்பும் பெற்றிருந்தார் என்பதற்குச்சீர்காழிப் பிள்ளையார் திருவவதாரமே பெருஞ்சான்றாகும். சம்பந்தர் தாயார் பெருந்தகையாராயிராவிடில் அவர் உதரத்தில் முருகக் கடவுளை யொத்த நமது சமயாசாரியர் தோன்றார். அங்ஙனமே வேளாள குலதிலகரான அப்பரின் தாயும், வாகீசர் புத்திரனாய் வாய்க்கத் தக்க திருவுதரம் பெற்றிருந்தார் என்பதும் விளங்கும். ஆயினும் அப்பரேனும் அல்லது சம்பந்தரேனும், வன்தொண்டர் இசை ஞானியாரைக் குறித்துப் பாடுவது போல் தமது தாய்மார்களைக் குறித்து யாதொன்றும் பாடியதாகக் காணப்பட வில்லை. சம்பந்தருக்குத் தம் தாயிடத்தில் இருந்த அன்பு கீழ் வரும் பாசுரத்திலின்று அனுமானிக்கலாம். தாயைக் காட்டிலும் உலகத்தில் சிறந்த பொருளில்லை என்றும், ஆயினும் அதுநிலையாகாதாதலால் சிவபெருமான் திருவடியே சிந்தித்தல் கருமம் என்றும் புகலிவேந்தர் கூறுவார்,

" தந்தையார் போயினார் தாயரும்
 போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
 பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம்
 வைத்தியால்ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம்
 மையல் கொண் டஞ்சல் நெஞ்சே''

திருநாவுக்கரசரும்,

" தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்தமாங் கறுத்துப் பயில் வெய்திய
சொந்த வீழ் பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்ம்மின்கள் சேவடி சேரவே''

என்றதால் உலகத்தில் தாய் தந்தை பந்தம் விடாதென அப்பர் கூறுவதாலும், அப்பரின் குணத்திற்கு ஒத்தவர்களாய் இராவிடில் நீ த்தகைய திருவாக்கு எழாதென்பது திண்ணமாதலாலும், அக்காலத்திய தாய்மார்கள் சிறந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும். இவ்வனுமானத்துக்குப் பொருந்த அப்பர் தமக்கையாகிய திலகவதியார் எத்துணைக் கல்வியும், சீலமும், பக்தியும் வாய்ந்தனர் என்பது பெரிய புராணத்தில் விளங்கும். அவரால் அன்றோ அப்பர் உய்ந்து கரை ஏறியது.

"காத்தாள்பவர் காவ லிகழ்ந்தமையாற்
 கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட [யேன்
 நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறி

வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றேடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே"

என்று அப்பர் பாடியதும் இவ்வம்மையாரை நினைத்தன்றே?

இனி வணிகர் குலத்தில் கற்பு வாய்ந்த பெண்மணியைப்பற்றித்திருஞான சம்பந்தர் திருமருகல் திருப்பதிகம் சிறப்பித்து விளக்கும்.

"வழுவாள் பெருமான் கழல் வாழ்கவென
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாளுடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக்கினையே"

"அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பதுபோல் பக்தி வாய்ந்த வேந்தன் ஆட்சியிலுள்ள குடிகளும் பக்தி வாய்ந்திருப்பார்கள் என்பது திண்ணமாதலால் பக்தி வாய்ந்த குடிகளைக் காணுமிடத்தில் புகை கண்டபோது நெருப்பு உண்டென்று அநுமானிப்பது போல் அரசனும் பரிசுத்தனென்று எண்ணலாகும். ஆயினும் அக்காலத்தில் அத்தேசத்தை ஆண்ட அரசர்கள் சமண சமயத்தில் ஈடுபட்டு இருந்தார்கள் என்பது நிச்சயம். பல்லவ சோழன் சமணர் சம்பந்தத்தால் அப்பரைத் துன்புறுத்தினனெனின், கூன் பாண்டியனும் சமண சமயத்தைக் குடிகள் பேரில் தனது ஆட்சியுடன் செலுத்தினன் என்பதும் ஆச்சரியமன்று. அக்காலத்தில் சோழன் மகளும் பாண்டிமா தேவியுமான மங்கையர்க்கரசியார் குலச்சிறை என்னும் மந்திரியாருடன் சிவபூசை செய்து அதன் பலனைச் சம்பந்தரை வரவேற்க சேர்ந்ததும் பெரிய புராணத்தில் அறிகின்றோம் அன்றோ? திருவால வாயில் திருஞான சம்பந்தர் எழுந்தருளியஞான்று மங்கையர்க்கரசியாரைப்பற்றியும் குலச்சிறையாரைப் பற்றியும் பாடிய பதிகத்தின் திருக்கடைக் காப்பாகிய,

"பன்னலம் புணரும் பாண்டிமாதேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறு சீராலவா யீசன்
திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமிழிவை கொண்
டின்னலம் பாடவல்லவ ரிமையோ
ரேத்த வீற்றிருப்ப ரினிதே"

என்னும் பாசுரத்தில் விளங்கும்.

ஆகையால் அரச குலத்தில் மங்கைமார் சைவ மதத்தை வளரச் செய்தார் என்பதற்கு இது ஒன்றே போதுமான அத்தாட்சியாம். இதன்றியும் அப்பர் சம்பந்தர் செய்த யாத்திரைகளில் ஆங்காங்கு தங்கிய அடியார்களின் இல்லத்தில் அவர் தேவிமார்கள் எவ்வாறு அவ்விருந்தினர்களைவங் தனுபசாரம் செய்தனர் என்பதையும் அவர்கள் திரு உள்ளத்தின் விசாலத்திற்கு உவமை கூறலாகாதென்பதும் சேக்கிழார் விளக்குகின்றனர். அவற்றில் சிலவற்றைக் கண்ணுறுவோமாக.

1. அப்பூதி நாயனர் சரித்திரத்தை அறியாதவர் யாவரும் இலர். இவர் மனைவியார், இறந்த மகனை மூடிவைத்துத் தமது கணவனுடன் ஒருங்கு சேர்ந்து, அப்பருக்கு விருந்தளித்த பெருவகை எதற்கு ஒப்பிடக் கூடும்? அப்பர் பாடியவாறு:

"அஞ்சிப் போய் கலிமெலிய அழல் நும்பும்
குஞ்சிப் பூவாய்நின்ற சேவடியே" [அப்பூதி
(திருப்பழனம்)

இவ்வம்மையார் திருவுள்ளம் என்று கூறலாகும்.



"அஞ்சிப்போய் கலிமெலிய
அழல் ஓம்பியது"

அப்பூதியடிகள் மாத்திரம் அன்று: அக்காலத்தில் பல இல்லறத்தார் இருந்தனர் என்பதற்கு சம்பந்தர் தேவாரம்,

"கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே."

2. முருக நாயனர் திருநீல நக்கர் முதலானோர் திரு மடங்களில் திருஞான சம்பந்தர் சென்ற காலத்தில் திருநீலகண்டயாழ்ப்பாணர்ஜாதிபேதமின்றி இடம் பெற்றது இல்லறதர்மம் வெளி வேடமாயிராமல் அக்காலத்தில் உண்மையான அறநெறி கடைப்பிடித்து ஒழுகும் மாதர் கையில் சிக்கியதென்பதற்கு இடம் கொடுக்கும்.

3. மற்றும் திருச் செங்காட்டங்குடியில் சிறுத் தொண்டர் மனைவியார் தமது புதல்வனாகிய சீராளனைக் கறியமுது செய்து சிவபெருமானுக்குப் படைப்பித்தது உலகம் அறிந்ததே. அவ்விடம் சென்று அம்மடத்தில் விருந்துண்ட திருஞான சம்பந்தர் திருச்செங்காட்டாங் குடியின் மீது மூன்று பதிகங்கள் பாடினர். அவற்றுள் சில இவர் தொண்டின் நுட்பம் விளக்கும்.

"செடி நுகருஞ் சமணர்களும்
சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப் பார்க்
கருளாத பண்பினன்
பொடி நுகருஞ் சிறுத் தொண்டர்க்
கருள் செய்யும் பொருட்டாகக்
கடி நகராய் வீற்றிருந்தான்
கணபதீச் சரத்தானே"

"கூராரவிரை தேர்ந்து
குளமுலவி வயல் வாழும்
தாராவே! மடநாராய்! தமியேற்
கொன்றுரை யீரே!
சீராளன் சிறுத்தொண்டன்
செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்ற
னருளொரு நாட்பெறலாமே"

இவற்றில் திருஞானசம்பந்தர் காலத்து, பெண்மணிகளாலேயே சைவ சமயம் தழைத்து ஓங்கியதாகக் காணப்படுகின்றது. இத்தகைய உள்ளம் பெற்ற பெண்மணிகள் அக்காலத்தில் இராவிடின் அப்பரும் சம்பந்தரும் செய்த பெருங் காரியங்கள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிருக்குமன்றோ? ஆகையால் இக்காலத்தில் நமது தமிழ்ப் பேரறிவாளர் சைவ சமயத்திற்கு உழைப்பதோடிராமல் தமது இல்லத்துள்ள பெண்களையும் அவ்வழியில் உழைக்கத்தக்க கல்வி நலம் கொடாவிடில் புறச்சமயங்களைஒழித்து நமது சன்மார்க்கத்தை நிலை நிறுத்துவது கடினமன்றோ?


## திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை, ஆசிரியர் மாணக்கர்க்கு அறிவுறுத்துவது போல வரையப் பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்பு பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுளது.

| | | | | |
|---|---|---|---|---|
| அறத்துப்பால் காலிகோ பையிண்டு விலை ரூபா | | 3 | 4 | 0 |
| பொருட்பால் | ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் | ,, | 1 | 12 | 0 |

பண்டிதர் - கி. குப்புச்சாமி முதலியார்,
3/2, பிள்ளையார்கோயில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

# திருஞானசம்பந்தர் திருமண நுட்பம்

['நவசக்தி' ஆசிரியர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

திருஞானசம்பந்தர், தமது திருமணத்தின்போது சிவசோதியிற் கலந்தமையான், அவர்தம் திருமணத்தைப் பற்றிப் பலதிறக் கருத்துக்கள் உலகில் உலவுகின்றன. திருஞானசம்பந்தர் திருமணத்தில் வேட்கை கொண்டாரில்லையென்றும், அவர்தம் அடிச்சுவட்டைப்பற்றி நடப்பவருந் திருமணத்தில் வேட்கை கொள்ளலாகாதென்றும், திருமணம் திருவருள் நெறிக்கு மாறுபட்டதென்றுஞ் சிலர் கூறுகிறார். வேறு சிலர் இக்கூற்றுக்கு மாறுபட்ட கருத்தை வெளியிடுகிறார்.

திருஞானசம்பந்தர் திருமணத்தைப் பற்றிய சரித்திரச் சான்றுகள் பலவில்லை. அத்திருமணத்தைப்பற்றிப் பின்னே புராணக் கதைகளும், தோத்திரங்களும், பிறவும் அன்பினின்றும் பொங்கிப் பெருகியெழுந்தன. அன்பால் ஒருவரை அளவு கடந்து போற்றுவதும், பகைமையால் ஒருவரை வரம்பின்றித் தூற்றுவதும் சரித்திரத்துக்குரிய சான்றுகளாகா.

திருமணக்காலத்தில் திருஞானசம்பந்தர் தீவலம் வந்தபோது, அத்தீ, தீவண்ணராகிய சிவபெருமான் நினைவூட்ட, அவர், தம்மனைவி முதலிய அன்பர்கள் புடைசூழ்ந்து தொடரத், திருக்கோயிலைநண்ணிக் "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினாரென்றும், அவ்வேளையில் திருக்கோயில் முழுவதுஞ் செஞ்சோதிமயமாய்த் திகழ்ந்ததென்றும், அச்சோதியினுள்ளே தம்மைச் சூழ்ந்து நின்ற மனைவி முதலிய பலரையும் புகுத்தருளித் தாமும் புகுந்து, இரண்டறக் கலந்தாரென்றுஞ் சரித்திரங் கூறுகிறது.

திருஞானசம்பந்தப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருநல்லூர்ப் பெருமணத் திருப்பதிகத்தில் திருமணக் குறிப்புத் திகழ்கிறது. அக்குறிப்புணர்தற்கு முதலிரண்டு திருப்பாக்களைச் சிறப்பாகக் கோடல் ஈண்டைக்கேற்புடைத்தாகும். அவை வருமாறு :—

"கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே" [டர்

"தருமண லோதஞ்சேர் தண்கடல் நித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயும் நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண்
[டானே"

முதற்பாட்டிற் போந்துள்ள "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" "பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில", "சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்டர்" — இவ்வுரைகளைக்கொண்டு திருஞான சம்பந்தப் பெருமான் திருமணத்தை வெறுத்துக் கூறினாரென்று சிலர் கருதுகிறார். அடுத்த திருப்பாட்டை உற்றுநோக்குமாறு அவ்வன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாந் திருப்பாட்டில் "பெண்ணோர் பாகங் கொண்டானே" என்றும், "பாவை நல்லார் வருமணங் கூட்டி மணஞ் செய்யும் நல்லூர்ப் பெருமணத்தான்" என்றும் ஞானசம்பந்தப் பெருமான் அருளியிருத்தல் உன்னற்பாலது. இவ்வுரைகள், திருஞான சம்பந்தர் திருவுள்ளம் திருமணத்தில் படிந்து கிடந்ததைச் செவ்வனே புலப்படுத்துகின்றன.



திருஞான சம்பந்தர் உலகிடைத் தோன்றித் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்களை நோக்குழி, அவர் ஆண்டவனைப் 'பெண்ணுடன் கூடிய பெருமான்' என்று போற்றினாரென்பதும், அதன் வாயிலாக இயற்கையோடியைந்த இன்ப அன்பு வாழ்வை உலகிற்கு அவர் அறிவுறுத்தினாரென்பதும், இச்செந்நெறியை யோம்பவே அவர் போந்தாரென்பதும், இன்ன பிறவும் வெள்ளிடைமலையென விளங்குதல் காணலாம். திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்குகளே, அவர்தம் நிலையைப்புலப்படுத்தவல்ல உறு கருவிகளாகும். அவைகளைக் கொண்டு, அவர் திருவுள்ளங் காண முயல்வதே அறம்.

திருஞானசம்பந்தர் தோன்றிய காலநிலையையும் இங்குச் சிறிது சிந்தித்தல்வேண்டும். அவர் காலத்தில் தென்னாட்டில் இயற்கைநெறிக்கு மாறுபட்ட கொள்கைகள், சமணம் பௌத்தம் என்னும் பெயர் தாங்கி, ஆக்கம் பெற்றிருந்தன. திருஞானசம்பந்தர் காலத்திய சமண பௌத்த சமயங்களின் நிலை, அவைகளைக் கண்ட விருஷப தேவர் ஆதிபுத்தர் கொள்கைக்கு அரண் செய்து நின்றதில்லை. இடையில் பல திறத்தூறுகள் எழும்பி முதலையே மறைத்து விட்டன. அத்தூறுகளை ஈண்டுக் கிளத்திக்காட்ட வேண்டுவதில்லை. எடுத்த பொருளுக்கேற்ப இரண்டொன்று கிளத்தல் நலன்.

சமண பௌத்த சமயங்கள் தோன்றிய காலை, அவைகளில் பெண்ணிழிவு இருந்தது என்று நிறுவிக்காட்டுதற்குப் போதிய சான்றுகளில்லை. நாளடைவில் சமண சமயத்தில் முற்றும், பௌத்த சமயத்தில் ஓரோவழியும் 'பெண்ணை வெறுத்தல் துறவு' என்னும் ஒரு போலிக் கொள்கை கவடுகோடு விடலாயிற்று. இது காரணமாகச் சமணசமயத்தில் இரண்டு பிரிவுகள் பின்னே தோன்றலாயின. ஒன்று 'திகம்பரம்' என்பது; மற்றொன்று 'சுவேதாம்பரம்' என்பது. திகம்பரர் பெண்ணை முற்றிலும் வெறுப்பவர்; பெண் பிறவிக்கு வீடுபேறில்லை என்று சொல்லுபவர். சுவேதாம்பரர் அங்ஙனங் கூறுபவரல்லர்.

திருஞானசம்பந்தர் காலத்தில் தென்னாட்டில் திகம்பரர் தொகையே பெருகியிருந்தது. அத்திகம்பரராட்சி வீறிட்டு நின்றது என்றுங்கூறலாம். அவ்வாட்சி, பெண் பிறவிக்குப் பேரழிவு தேடிற்று. அதனால் இயற்கை இன்ப அன்பு நெறி வீழ்ந்துபடும் ஒரு நிலை நேர்ந்தது. அவ்விருள்நிலை போக்கி, இயற்கையின்ப அன்பு நெறிக்குப் புத்துயிர் வழங்கவே திருஞானசம்பந்த ரென்னும் இளங்கதிர் தோன்றிற்று. இந்நுட்பம் அவர்தந் தீந்தமிழ்ப் பாக்களால் இனிது புலனாகும்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் யாண்டும் இயற்கைமணங் கமழ்ந்த வண்ணமாயிருக்கும். அத்தமிழ் மறையின் எம்மூலை முடுக்குகளிலும் 'ஆண்டவன் பெண்ணொடு கூடிய பெருமையன்' என்னுங் கருத்துக்

காட்சி யளித்துக்கொண் டிருக்கும். அக்கருத்து மிளிராத திருப்பதிகங் காண்டல் அரிது. திருஞானசம்பந்தர் தேவாரத்தை இயற்கை இன்ப அன்பு உறையுள் என்று கூறல் மிகையாகாது.

பெண்ணொரு பாகமும் இயற்கை வனப்பும் யாண்டும் பொதுளத் திருஞான சம்பந்தர் பாடியதன் காரணமென்னை? காரணமின்றிக் காரியமில்லையன்றோ?

திருஞான சம்பந்தர் காலம் பெண் வெறுக்கப்பட்ட காலம்; இயற்கையின்பம் துறக்கப்பட்ட காலம். பெண்ணை வெறுத்தல் பெருந்துறவு என்ற காலம் அக்காலம். அக்காலக் கடவுள் எவ்வறத்தை விழைந்திருக்கும்? அறநெறியைக் கால தேசவர்த்தமானத்துக்கேற்ற முறையில் அறிவுறுத்தவே பெரியோர்கள் போதருவது வழக்கம். திருஞானசம்பந்தரும், தமது காலத்தில் இயற்கை யன்னை வேட்டு நின்ற அறம் எதுவோ, அதை முறையே அறிவுறுத்தினார். உள்ள அறநெறி யொன்றே. அதற்கிடர் நேரும்போது, பெரியோர் போந்து அவ்விடர்களைவர்.

விருஷப தேவரும் ஆதிபுத்தருங் கண்ட நன்னெறி இடையில் பாழ்பட்டது. அதைச் செப்பஞ் செய்யத் திருஞான சம்பந்தர் தோன்றினார். ஆகவே அவர் விருஷப தேவரினின்றும், ஆதிபுத்தரினின்றும் வேறுபட்டவரல்லரென்க. விருஷப தேவரோ, ஆதிபுத்தரோ, அவர் போன்ற மற்றொருவரோ திருஞான சம்பந்தராகத் தோன்றி யிருக்கலாம். பெரியோர் கட்கென ஒரு திருக்கூட்டமுண்டு. அதன் நோக்கம் ஒன்றே. அவ்வொரு நோக்கை யோம்புதற்கென்று அத்திருக் கூட்டத்தினின்றும் ஒருவரே பன்முறை தோன்றலாம்; மற்றவரும் அவ்வப்போது தோன்றலாம். உருவ வேறுபாட்டைக் கருதுவது 'அநாவசியம். அவரவர் திருவாக்குகளிலுள்ள ஒருமைப்பாட்டை புணர முயல்வதே அறிவுடைமை.

இவ்வுண்மை தேறுதார், திருஞான சம்பந்தர் சமண பௌத்த சமயங்களை அழிக்கப்போந்தார் எனக்கூறி இடர்ப்படுவர். திருஞானசம்பந்தர் சமண பௌத்த சமயங்களை அழிக்கப்போந்தவரல்லரென்பது எனது ஆராய்ச்சியில் விளங்கிய வுண்மை. அச்சமயங்களின் பெயரால், போதகர்கள் இடைக்காலத்தில் நுழைத்த பெண்ணை வெறுத்தல், இயற்கை யின்பத்தைத் துறத்தல், உடலை யொறுத்தல் முதலிய தூறுகள் பல படக்கிளம்பிப் பசிய அறப்பயிரை மூடின. திருஞான சம்பந்தர் அத்தூறுகளைக் களைந்து, திருவருள் ஒளியை அறப்பயிர் மீது படரச்செய்தார்.

திருஞானசம்பந்தர், சமண பௌத்தப் பெயரால் இயற்கைச் செந்நெறியைப் பாழ்படுத்திய போதகர்களையும், அவர்களின் மறவினைகளையுங் கடிந்து பதிகந்தோறும் பாடியிருத்தல் உண்மை. சமண பௌத்த சமயங்களை அவர் கடிந்து யாண்டும்பாடினாரில்லை. இந்நுட்ப முணராது திருஞானசம்பந்தரை வைவது அறமாகாது. திருஞான சம்பந்தர் தேவார முழுவதும் 'ஆண்டவன் பெண்ணொரு கூறன்' என்னும் உண்மையும், இயற்கையின்பவருணனைச் செம்மையும் மலிந்து கிடத்தற்குரிய காரணங்களை விளக்குதற் பொருட்டே சமண பௌத்த சமயங்களின் இடைக்கால நிலையை ஈண்டுச் சிறிது குறிப்பிடல் நேர்ந்தது. இது நிற்க.



திருஞானசம்பந்தர், ஆண்டவனைப் 'பெண்ணொரு கூறன்' என்று அடிக்கடி வலியுறுத்தியதன் நுட்பம் ஈண்டு எடுத்த பொருளுக்கு வேண்டற்பாலது. இந்நுட்பத்தை இடையீடின்றித் திருஞான சம்பந்தர் வலியுறுத்தியதின் நோக்கமென்னை? உலகம், பெண்ணொடு கூடி வாழ்ந்து, இயற்கை வடிவான இறை யின்பத்தைத் துய்க்க வேண்டுமென்பது அவரது நோக்கம் என்று சுருங்கச்சொல்லலாம். இந்நோக்குடைய ஒருவர், வாழ்க்கைக்கு இன்றியமையாததும், இயற்கை இறை நெறிக்கு அரண் செய்வதுமாகிய திருமணத்தை 'வேண்டாம்' என்று கூறுவரோ?

பின்னை, "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" என்பதன் கருத்தென்னை? கல்லூர்தல் முதலிய சடங்குமணம் வேண்டாமென்பது அதன் கருத்து. சடங்குகளைத் திருஞான சம்பந்தர் விரும்பாதவரென்பது அவரது உபநயன வரலாற்றானும், நாள் கோளின் நிகழ்ச்சிகளைப் பொருட்படுத்தலாகாதென்பது, அவர் அருளிய "வேயுறு தோளிபங்கன்" என்னும் பதிகத்தானும், பிறவானும் விளங்குதல் காண்க.

இரண்டாந் திருப்பாட்டை நோக்கின், திருஞானசம்பந்தர் திருவுள்ளம் நன்கு புலனாகும். அத்திருப்பாட்டு, திருஞானசம்பந்தர் இயற்கைத் திருமணத்துக்கு மாறுபட்டவரல்லரென்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிவிக்கிறது.

திருஞானசம்பந்தர் திருமணத்தில் பற்றுடையராயின், அவர் மனைவியுடன் சின்னாளாதல் ஏன் வதிந்தாரில்லை என்று சிலர் வினவலாம். திருஞானசம்பந்தர் எதன்பொருட்டு உலகு நோக்கினரோ, அது முற்றுப் பெற்றுவிட்டது. அவர் அதற்குமேல் உலகில் வாழ்தல் ஆண்டவன் ஆணைக்கு மாறுபட்டொழுகுவதாகும்.

தமிழ் நாட்டில் இயற்கை நெறிக்கு இடர் நேர்ந்தது. அவ்விடர் களையத் திருஞானசம்பந்தர் போந்தார். அக்கடன் நிறைவேறிற்று. அதற்குமேல் அவர் உலகிலிருத்தல் நியாயமாகுங்கொல்? ஆண்டவன் அவருக்குக் கோலிய காலவரை, அவர்தம் திருமணத்தின் போது முற்றுப்பெற்றதென்று கொள்ளுதல் வேண்டும். அக்கால எல்லை, பெருமான் திருமணக்கோலம் பூண்டு, திவலம் வந்தபோது, அவர்க்குத் திருவருளால் விளங்கலாயிற்று. அவ்விளக்கம் அவரைக் கோயிலுக்குப் போதுமாறு உந்திற்று. கோயிலோ சிவசோதிமயமாகக் காட்சியளித்தது. கோயில் ஏன் சிவசோதிமயமாக அவ்வேளையில் காட்சியளித்தல் வேண்டும்? அன்பர்கள் உன்னுவார்களாக.

திருஞானசம்பந்தர் மேலும் உலகில் வாழ்தல் வேண்டுமென்பது திருவருள் கருத்தாயின், கோயிலில் சிவசோதி தோன்றியிராது. அத்தோற்றக்குறி திருஞானசம்பந்தரை அழைப்பதன்றோ? திருவருளின் குறிப்புணர்ந்து நடத்தல் பெரியோரியல்பு.

"இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே" என்னும் பெரிய புராண வாசகத்தை எடுத்துக் காட்டித் திருஞான சம்பந்தர் இல்லொழுக்கங் குறித்து வருந்தியதாகச் சிலர் சொல்லக்கூடும், பெரிய புராண ஆசிரியரின்

உட்கிடக்கை அஃதன்றென்பது அவரருளிய முன்பின் வாசகங்களால் நனி விளங்குகிறது.

திருமண வேளையில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருவருள் குறிப்பை புணர்த்தியது ஆண்டிருந்த அங்கியே யாகும். அதனை, "அங்கியாவார் விடை உயர்த்தவரே" என்று சேக்கிழார் குறிப்பிட்டிருத்தல் காண்க. திருவருள், அங்கி வாயிலாகத் திருஞானசம்பந்தப் பெருமான் கால எல்லையை நினைவூட்டி விட்டது. அவ் வேளையில் இல்லொழுக்கமுஞ் சூழ்ந்தது. திருஞானசம்பந்தர் என் செய்தார்? அவரோ பெண்ணை வெறுக்கும் பேதையரல்லர்; அவர் பெண்ணுக்குப் பெருமை தேட வந்த பெரியார். அத்தகைய ஒருவர் "இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே" என்று இடர்ப்படுதல் எங்ஙனம்? இங்கே சேக்கிழார், மிகத் திறம்படத் திருஞானசம்பந்தர் திருவுள்ளத்தைப் புலப்படுத்துகிறார். "இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே" என்று கூறுமளவில் சேக்கிழார் பெருமான் நின்று விடாது, "இவள் தன்னோடும் அந்த மில். சிவன் தாள் சேர்வன்" என்று திருஞான சம்பந்தர் திருவுள்ளங்கொண்டதாக அவர் திருவாய் மலர்ந்துள்ளதையோர்க.

"இந்த 'இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே" என்பதில் மட்டும் கருத்தூன்றி நிற்றலாகாது. அதைத் தொடர்ந்து நிற்கும் "இவள் தன்னோடும் அந்தமில் சிவன் தாள் சேர்வன்" என்பதிலும் அக்கருத்தை நிலை பெறுத்தி உண்மை புணர முயல்வதே சிறப்பு.

திருஞானசம்பந்தப் பெருமான் சிவசோதியில் தாம்மட்டுங் கலக்கத் திருவுள்ளங் கொண்டாரில்லை. அவர், தம்முடன் சூழ்ந்து நின்ற மனைவியையும் மற்றவரையும் சிவசோதியுட் புகுத்தருளித், தாமும் அதனுள் புகுந்து இரண்டறக் கலந்தார். பெண்ணுக்கு வீடுபேறில்லையென்ற கொள்கை உலாவிய அந்நாளில் பெண்ணுக்கு வீடுபேற்றை வழங்கிப் பெண் பிறவிக்குப் பெருமை தேடிய வள்ளல் நமது திருஞானசம்பந்தப் பெருமான். அப்பெருமானா பெண்ணை வெறுத்தவராவர்? வீண் பழி! வீண் பழி!

ஆகவே, திருஞானசம்பந்தர் திருமணத்தை வெறுத்தவரல்லர் என்க. பெண் ஆண் கூடி வாழும் இயற்கையின்ப அன்பு நெறியை யோம்ப வந்த பெரியார் அவர் என்க. திருஞானசம்பந்தப் பெருமான் போதநிலை முடிந்த வழிப் புக்கொன்றியுடனும்போழ்தும் தமது அருமை மனைவியை மறவாது உடன் அழைத்துச் சென்ற பெருந்தகைமையை அன்பர்கள் கருத்தூன்றி நோக்கிப் பெண்ணுடன் வாழும் பெருமையை உணர்வார்களாக.

"மண்ணில்நல் லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு
யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும்
பெருந்தகை யிருந்ததே"

—திருஞானசம்பந்தர்

187155